ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில ஹூ மார்கழி 15உ (29—12—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 34

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!!

மூப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்று மழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய **தங்க பஸ்பம்** சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.:

தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம் நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகளை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தனுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ.15.

குருதாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.


ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

**வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி,** நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை

(11)

பேர்பெற்ற ஊதுவத்திகள்

எங்களிடம் ஆசவர்த்தி, அம்பர்வத்தி, ஜவ்வாதுவத்தி, புனுகுவத்தி, கஸ்தூரிவத்தி, அநேக தினுசு ஊதுவத்திகள் ரொம்பவும் திடமான சரக்காய் தயார்செய்து, வியாபாரிகளுக்கு குறைவு விலையாகவே அனுப்புகிறோம். எங்கள் சரக்கு ஒரு தடவை வரவழைத்துப் பார்த்தால் பிறகு எங்கள் சரக்கை மறக்காமல் அடிக்கடிக்கும் ஏராளமாய் ஆர்டர் செய்வீர்கள் என்று நம்புகிறோம். வேண்டியவர்கள் உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பி. கே. பாலசுந்திரம் நாயுடு அண்டு கோ.,

ரங்கசாமி கோவில் தெரு,

பெங்களூர் டவுன்.

தந்தி—'மகாவிஷ்ணு'

# சாத்திரங்களின் ஆபாசம்

[ஏ. டீ. நாயகம்]

(1-12-29 குடியரசு தொடர்ச்சி)

சகோதரர்களே! சகோதரிகளே!

ஏவல், பில்லி, சூனியமிவற்றின் மர்மங்களின் கொடுமைகள், அம்மம்ம! அளவிடலரிது. 'இன்னான் தங்களைக் கெடுக்கவெண்ணி ஏவல் செய்துவிட்டான், அல்லது பில்லிவைத்திருப்பான்' என்றும், 'இன்னார் இன்னாரின் வேண்டுகோட்காக மலையாளமந்திரவாதி ஒருவன் சூனியஞ்செய்துவிட்டான்' என்றும், இன்னும்பற்பல விதமாகவும் இவ்வுலகிற்சிலர்... அல்ல பலரே அஞ்சிக்கூக்குரலிட்டலைகின்றனர் என்பதை யாவருமறிவார்கள். என்னே! ஆச்சரியமிது? இம்மண்ணுலகிற் பிறந்த மானுடனொருவனே மற்றோர் மானுடனைத் தான் நினைத்தபடியே அழித்துவிடலாமெனின், பல நூற்றாண்டுகளாக சனத்தொகையிற் கோடிக்கணக்காய் நிறைந்துளவிந் நாட்டில் மானுடவர்க்கம் பெருகிவளமடைந்ததெங்ஙனம்? ஏவலையோ, பில்லியையோ, சூனியத்தையோ ஒருவன் செய்துவிட்டான். அது நிச்சயம்; நீங்கிவிழுக்குமென அவரவர் மனத்திடை யறியாமையாற் கொண்டதிலாற்றிக்கிட்டவையும் இரத்தாசயங்கெட அங்ஙனே நேர்ந்த கலவரத்தானே முக்கூறப்பட்ட ஏவலாதி மாரணங்களால் நேர்ந்தன. நிங்கென நினைந்து மருளுகின்றனர். அந்தோ! ஏவலை நினைத்து ஏங்குகின்றனர்; பில்லியை நினைத்துப் பேதிக்கின்றனர்; சூனியத்தை நினைத்துச் சுருளுகின்றனர்; ஆ! அத்தகைய சகோதரர்களே! இதோ மொழியின், இடர்ப்படக் கொண்மின். ஒருவனிடம் மறைந்திடுமென்பது சூனியம் (பாழ்) ஆயின் சூனியம் (மாரணம்) என்பது தலை தூக்குமாறு போலியங்களல்ல மயக்கத்தை ஈந்து மாந்தரையழிக்கும் மாரணமாமெனத் தோற்றுவதாகுமென்பதை யுணருவீர்களாக. சூனியமாதியாயுள்ள மாரணவித்தைகளின் அன்மையால் ஒருவனைப் படிப்பதற்கிடமுளதேல் அந்நாட்டிற்றெனமையாதியாய்க் கோலோச்சிய அரசர்தங்களின் சத்துருக்களை எதிர்க்கவும், அவர்களை அழிக்கவும் என்னும் போது யுத்தமுறையில் நற்பயிற்சியடைந்த வீரர்களையும், இரதம், கயம், அசுவமெனுமிவைய சேனைகளையும், வில், வாள், சக்கரம், மழு, சூலம், தோட்டி, வேல், வச்சிராயுதம், தண்டு, ஈட்டி, கைவேல், இருப்புலக்கை, பெருஞ்சவளம், சிறுசவளம், விளக்கயிறு, ஊசி, முசுண்டி, உளிவாய்க்கட்டி, குந்தம், கத்தி, கைவாள், நடைவேல், அரிவாள், வட்டக்கழுமுள், சராசம், பிண்டி, பாலம், அம்பு முதலிய ஆயுதங்களையும் உபயோகிக்க வேண்டிய அவசியம் யாதோ? அறிஞர்களே! சிந்தித்துணர்வார்களாக. தவிரவும் ஆங்கில வாதிக்கத்திலிருந்நாடுட்பட்ட காலமுதல் அவ்வாங்கிலேயரை இன்றுவரையுமெதிர்த்த பல்வேறு தேசத்துப்பகைவர்களை அழிக்கக்கடும்போர் புரிவதும், அவ்வெம்போரிடை பீரங்கிகளையும் பிரமாதமான குண்டுகளையும் உபயோகித்தனரே ஏன்? மாரணத்தால் மாற்றலரைக்கணத்துள் மடித்துவிடலாமே? இவ்வெளிய முறையைக் கையாடாமல் பெருந்தொகையைச் செலவிட்டு நட்டமுமடைந்ததுடன் நம் நாட்டுவீரர் பலரும் தங்களிரத்தமுஞ் சிந்த கெடுநாட்போர் புரிந்ததேன்? ஏன் என்பதைச்சற்றூன்றிக்கவனிப்பீர்களாகுக். போலி மாரணவித்தைகளின் வன்மையின் உண்மையின்மை வெள்ளிடைமலையென விளங்கும், மின்சார சக்தியாலும், காந்தசக்தியாலும் நீராவியாலும், தவிர மற்றும் அற்பப்பொருள்கள் பலவற்றின் கலப்பினாலும் தந்தியையும், அதிலும் கம்பித்தொடர்பேயில்லாத் தந்தியையும், புகைவண்டியையும், ரோசக்கப்பலையும், பஞ்சாலை போன்ற பல அரிய ஆலைகளையும், ஆகாயவிமானங்களையும் விரிக்கிற்பெருகவல்ல. எளிய வெண்ணற்ற அரிய பெரிய இயந்திரங்களையும் தங்களறிவால் கண்டுபிடித்த ஆங்கிலேயர் இச்சூனியமென்னும் மாரணவித்தையைக்கற்க வழிதெரியாமலா, முடியாமலா, அறிவில்லாமலா விட்டுவிட்டார்கள்? இன்னுமோருண்மையைக் கவனிப்போம் இத்தைக்குச் சமார் நூற்றுமுப்பதுவருடங்களுக்கு முன் தென்னாட்டுச்சிங்கமென விளங்கிய பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டின் அதிபரும் வாக்குவன்மைநிறைந்த கம்பளத்தார் குலதிலகருமான வீரபாண்டிய கட்டபொம்மு நாயக்கர் என்பவர் மாரணவித்தையில் மகாநிபுண பண்டிதராயிருந்தனரென்பதை இன்றும் இந்நாடு கூறிப்புகழுவதை யாவருமறியார்கள். சகோதரர்களே! நிச்சயமிது வென யாவருமறிவார்கள். மாரணத் தொழிலிற்சமர்த்தனுமம் மன்னன் தமக்கு நேர்ந்த அகால மரண சமய காலத்திலத்தொழிலின் வன்மையை உபயோகித்திருப்பராயின் இக்காலம் அப்பாளையப்பட்டு பிரகாசிக்குமன்றோ? அவரிடத்திருந்தவம் மாரணத் தொழில் அக்காலம் எங்குதான் சென்றதோவெவருமறியார். பில்லி, சூனியம், ஏவல் என்னும் மாயமாரண வித்தைகளெல்லாம் மானுடர் நெஞ்சத்திடைக் கிடக்காதாரமான கொள்கைகளையுடையனவேயன்றி அவற்றாலாவன ஏதுமின்றெனப் பன்முறை கூறலாம். பேதலித்தோன் நெஞ்சிற்பேயும் பூதமும்; சோர்வுற்றோன் நெஞ்சிற் சூனியமும் பில்லியுங்குடிபுகும். இப்போலி மாரணங்கள் திடமனமுடையாரைச் சோராதகலும். அறிவுடையவரை ராணுவஞ்சும் சுயமரியாதையூன் தூரவிலகும். பேய் பூதாதிகளும் சூனியம் முதலான மாரணங்களும் சூனியமேயெனத் தன்னறிவாற்றெளிந்தவனெவனோ அவனை எக்காலத்தும் எத்தீங்கும் சேரற்பாலதின்று. இக்கருத்தடங்கிய நம் தலைவர் உயர் திரு. ஈ. வெ. இராமசாமியாரின் கட்டுரைகளை (3-11-29 குடியரசு) புணர்ந்து பில்லி சூனியமெனும் இம்மாரணங்களானுடற் கெத்தகைய தீங்கையு மீயும் வன்மைகொண்டிலவெனத் தெளிவுறலவசியமென மீண்டுமொருமுறை கேட்டுக்கொள்கின்றேன். மாயண்ந்தால் இந்நோய்கண்டது. இத்தீங்குற்றது; இவ்விபத்துண்டாயதென வெண்ணித் திகைப்பீர்களோ? இவற்றை யொழிக்கச் சாந்தியெனும் பரிகாரமுள்ளதெனப்பகர்ந்து திரியும் போலிப் பெரியோரின் சூழ்ச்சிக்குடன்படுவீர்களோ? ஏதேனுந் தங்கள் மனத்திடையுண்மை புதையமாயிருக்கும் பொழுது அத்திகைப்பு மவ்வுடன் பாடுமுண்டாமோ? ஓர்போது முண்டாமோ? ஓர்போதுமுண்டாகாது. ஏனெனில், நோய்கண்டு மருந்தருந்தின் அந்நோய் குணமாம். சாந்தியாற் பிணியை அகற்றலசாத்தியமன்றோ! தீங்கேதுமுறின், வள்ளுவப்பெரியார் கூறிய "இன்னா செய்தாரை யொறுத்தலவர் நாண நன்னயஞ் செய்துவிடல்" என்னுமிக்குறட் பெருங்கருத்தே போதியது. பரிகாரத்தாற்றீங்கைப் பரிகரிக்கவியலாதன்றோ? விபத்தேதுமுண்டாயதெனின் அவ்விபத்தினுண்மையை யறிவாற்றெளிந்து மீட்டலே இலகுவாம். அழியே சென்றிடின் வசைமோசமில்லை. மதிமயக்கால் அவ்வழியினின்றும் விலகிவிட்டாலோ நேருங்கதி?

இன்னுமிவைபோன்ற பித்தலாட்டங்களைப்பற்றிப் பின்னர் ஆராய்வாம்.

(தொடரும்)

## பௌத்த திருவிழா

இலங்கை தமிழர் புத்த சங்கம் கொழும்பு நமது சங்கத்தின் சார்பில் 1930 வருஷம் ஜனவரி மாதம் 14ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் கொழும்புபிறக்கோட்டை கடற்கரை தெரு, 18ம் நெம்பர் தோட்டத்திலிருந்து மேளவாத்தியத்துடன் பௌத்த திருவிழா சொக்சிகடை செட்டித்தெரு வழியாக ஊர்வலம் சுற்றி நமது சங்கத்தின் சபாமண்டபத்துக்கு வந்து சேரும். தீண்டப்படாதவர்களுக்கென இச்சங்கம் பெரும் உதவியாக உழைத்து வருவதால் நம் தாய் நாட்டு சிரோண்மணிகளாகிய சகோதர சகோதரிகள் யாவர்களும் மேற்படி தினத்தன்று ஒன்று சேர்ந்து நமது சமத்வத்தை நிலைநாட்டுவோம். அன்று தினம் இலங்கையில் ஸ்தாபித்துள்ள தமிழர் சமத்வ சங்கம் மேற்படி திருவிழாவுக்கும் உதவிபுரிபவர்களாக நிற்பதோடு பல பெரியவர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும். சகலரும் வந்து மேற்படி விழாவில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று திரு. கே. கோவிந்த பிள்ளை எழுதுகிறார்.


## தற்புகழ்ச்சியல்ல

Use always by

Mayavaram, R. S. KRISHNA'S

உலகப் பிரசித்திபெற்ற

ஸத்குரு சிங்கச் சந்தனாதி, பிருங்காமலகம், அரைக்கீரை விதைத்தைலம் முதலியவைகளே உங்கள் மூளைக்கு குளிர்ச்சியைத் தந்து தேக ஆரோக்கியத்தைத் தரக்கூடியது. டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறது. நமது மலையாள ஆயுர்வேதிக் பார்மஸி ஸத்குரு ரத்த சுத்தி மதனாம்ருத மேகராஜ தீபன ஹல்வா, அமுதசுரபி டானிக், மாணிக்க ரஸாயனம், லோகா ஆஸவம் முதலியவைகளே ரத்தத்தை சுத்திசெய்து தாதுபுஷ்டியைத்தர வல்லமையுள்ளது. உத்திரவாதமுண்டு.

வியாபாரத்திற்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்

ஏஜண்டுகள் தேவை

மலாய் நாட்டில் கிடைக்கும் இடம்.

நமது R. S. கிருஷ்ணா சிங்கமார்க்கைப் பார்த்து வாங்கவும்.

P. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,

(442) 48-50, சொங்கம் ரோட், சிங்கப்பூர்.

# மேன்மை தங்கிய வைசிராயின் உபதேசத்திற்கு பதிலென்ன?

(கைவல்யம்)

இப்பொழுது இராஜப்பிரதிநிதியாய் நம்மை ஆண்டு வரும் வைசிராய் அவர்கள் அவர் நாட்டை விட்டு நமது பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கினதும், உங்களுக்கிடைக்கும் சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார். இந்தவார்த்தையை விட தருமமான ஈஸ்வரப்பிரீதியுடைய மந்திரங்கள் எச்சமயத்திலுமில்லை, எந்த ராஜநீதியிலுமில்லை, என்றாலும் நம்மவர்களுக்கு அவ்வார்த்தை அர்த்தமாகவில்லை. அர்த்தமானாலும் எல்லாசமயங்களைவிட தத்துவத்திலும் புராதனத்திலும்உயர்ந்ததென்று பாராட்டிக்கொள்ளும் நம் சமயங்கள் அந்த உத்தம வார்த்தையை உபயோகப்படுத்திக்கொள்ள இடம் கொடுக்கவில்லை என்றே நமது சமயவாதிகள் சொல்லுகிறார்கள்; என்றாலும் தங்கள் ஒரு சிறு காரியத்திற்கு நமது சமயவாதிகள் சமயத்தைத்தள்ளி விடுவதும் இன்னொருவர் அடைந்த நன்மைகளில் தங்களுக்கும் பங்குண்டென்றும் அது தங்கள் கடவுளாலே வந்ததென்றும், தங்களுக்குக்கொடுப்பதே தருமமென்றும் உபதேசித்து தங்களை இரட்சித்துக்கொள்ளுகிறார்கள்.

இப்பொழுது நமது வைசிராய் சென்னையில் சொன்ன உபதேச வார்த்தைகள் போற்றக்கூடியது மட்டுமல்ல. நமது சைவர்கள், வைணவர்கள், சுமார்த்தர்கள், மாத்துவர்கள் முதலிய இந்து சமயத்தவர்களெல்லாம் அவரவர் சமயங்களுக்கு ஆரமாகப்போட்டு ஆராதிக்கக்கூடியதுமாகும்; இல்லையானால் இந்து சமூகப்பலம்குறைந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை என்று அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தை சத்தியமேயாகும்.

அவர் சொன்ன வார்த்தையையும் அதன்கருத்தையும் கவனித்துப்பாருங்கள். அதாவது "தாழ்ந்தவகுப்பு" என்ற பதத்தைக் கேட்டமாத்திரத்திலேயே இத்தகைய கேவலமான தாழ்மைஅடைவதுஎன்னநீதி? எந்தமனித சமூகத்திற்கு அது பொருந்துமென்ற யோசனை ஒவ்வொருவர் மனதிலும் உதிக்கிறது என்றார். "தாழ்ந்த வகுப்பு" என்றுசொல்லுவதேஅநீதியென்றும்,எந்த மனித சமூகத்திற்கும் அந்த அநீதி பொருந்தாதென்றும், உங்களுக்குமட்டும் அந்த அநீதி எப்படி பொருந்தியிருக்கிறதென்றும் அவர் நம்மைப்பார்த்துக் கேட்கிறார். படித்தவர்களே, பரீட்சை கொடுத்தவர்களே, பட்டம்பெற்றவர்களே, சட்ட ஞான கலாவல்லவர்களே! இதற்கென்ன பதில் சொல்லுகிறீர்கள்.

உலகத்தில் வேறெங்கேனும் "தாழ்ந்தவகுப்பு" என்ற சமூகமிருக்கிறதா? இங்குதான் அதிசயமாகக் காண்கிறது. எங்குபோனாலும் சமூகத்தில் உயர்வு தாழ்வு என்பதொன்றுண்டு. சம்பத்தும் தரித்திரமும் ஒன்றோடொன்று பொருந்தாம லிருப்பதுண்டு இந்த வேற்றுமையைநிவர்த்திக்கமனிதனென்றவனும்பாடுபடுவதுண்டு. ஆனால், பிறவியினால் ஒரு மனிதன் தாழ்த்தப்பட்டு அவன் வாழ்வின் சௌகரியங்களை அனுபவிக்க முடியாமல்வேறெந்த தேசத்திலும் தடுக்கப்பட்டதில்லை என்றார். அதாவது எந்த தேசத்திலும் சம்பத்திலும் அது இல்லாமையாலும் உயர்வு தாழ்வுண்டு. அதையும் நிவர்த்திக்க மனிதன் எந்த தேசத்திலும் பிரயத்தனப்படுகிறான்.பிறவியினால்ஒரு மனிதனை தாழ்வாக நினைத்து பள்ளி, கோயில், ரஸ்தா,கிணறு,குளம்,ஆறு, தொழில், சேவகா விருத்தி முதலிய மனிதவாழ்வின் சௌகரியங்களுக்கு இடம் கொடுக்காமல் வேறு எந்நாட்டிலும் தடுக்கவில்லை. உங்கள் நாட்டில் மட்டும் ஏன் தடுக்கிறீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார். நம்மில் பெரிய சமயவாத சாஸ்திரிகளே! கவித்திறம்கண்டு களிக்குரும் பண்டிதர்களே! ஆச்சாரிபீடத்தைத் தாங்கும் ஆச்சாரிகளே! பக்தியில்பரவசமாகும் பக்தர்களே! தனவான்களே! அதற்கென்னபதில்சொல்லுவீர்கள்.

தண்ணீரில் மூழ்கி இறப்பவனைக் காப்பாற்றுவதற்கு யோசனை செய்து கொண்டு தயங்குவோர் காணப்படுவது அரிது. தண்ணீரில் மூழ்கித்தத்தளிப்பவன் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள பக்கத்தில் செல்லும் படகில் தொத்தினால் அவன் கையைத் துண்டிப்பவர்கள் காணப்படுவதும் அரிது. அவ்வித மிருகமும் உங்கள் சமூகத்தில் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டுத் தவிக்கும் தம் சகா ஜீவன்கள் வாழ்க்கையின் பரியாது கஷ்டப்பட்டுப் பரிதவிப்பதைக் கண்டு மனம் கலங்காமல் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார் என்ற நம்பிக்கை என்னையேமீறிஎன்மனதை வருத்தப்படச் செய்கிறது என்று சொன்னார். தண்ணீரில் விழுந்து தத்தளிக்கிறவனை எடுப்பதற்கு தைரியம்இரக்கம் நீந்தல் துணிவு எண்ணம் இத்தனையும் வேண்டும். இத்தனையும்வயிறு பெருக்க வளர்க்கும் வைதீகத்தில் காண்பதரிது. ஒரு சிறிதவைத்தாலும் நீரில் தத்தளிப்பவனை எடுத்துத் தப்ப வைப்பது? அவன் பிராரத்துவத்தை அனுபவிக்கும்படியாக விட்டுவிடுவதா? என்பதற்கு சாஸ்திரப் பிரமாண விசேஷ விதியைப் பார்க்க வேண்டும்,தண்ணீரில் விழுந்து தவிப்பவனை எடுத்து விடுவதற்கு விசேஷ விதி கிடைத்து விட்டாலும் அவன் ஜாதி தெரிய வேண்டும், ஜாதி தெரியாதவனைத் தொட்டுவிட்டால் அந்தத் தீட்டுக்காகப் பிராயசித்தம் செய்து கொள்ளவேண்டும். இத்தனை தொல்லைகளையும் கவனித்து தண்ணீரில் மூழ்கி இறப்பவனை எடுத்து விட்டுப் போவதற்குள் கோயிலில் தீபாராதனை தீர்ந்துவிடும். அழித்த சாணிகளைப் போட்டும் விபூதியை அணிந்தும் போவதற்கு நேரமாகிவிடும். பெருமான் சேவை கிட்டாது ஈஸ்வர சன்னதி மூடி விடுவார்கள். பெருமான் சேவையும் ஈஸ்வர தெரிசனமும் விட முக்கியமானதேதாவதுண்டா? இதைவிட தருமமென்ன விருக்கிறது? எல்லா தருமங்களும் ஈஸ்வரப்பிரசாதத்திலடக்கம் யாரோ எடுப்பார்கள். கடவுள் கடாட்சமிருந்தால் எப்படியும் பிழைத்துக் கொள்ளுவான். நாம் தானா கர்த்தா? நான் என்கிற ஆணவம் எதற்கும் வரப்படாதே. எதற்கும் கடவுளில்லையோ அவரவர்கள் கருமம்போல் அந்தந்த ஜீவன்கள் அனுபவிக்கிறது என்று சொல்லும் நமது சமய சாஸ்திர பத்ததியுடையவர்கள்போல் வேறு எந்த நாட்டிலுமில்லை யென்றும் சமயக் கொடுமையால் துன்பப்படுவோரைக் கரை ஏற்றுதவர்கள் வேறு எந்த நாட்டிலுமில்லை யென்றும்,தண்ணீரில்தத்தளிப்பவன் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பக்கத்தில் செல்லும் படகில் தொத்தினால் அவன் கையைத் துண்டிப்பது உங்கள் நாட்டிலிருப்பது போல் வேறுஎந்த நாட்டிலுமில்லவேயில்லை என்றும், அது எதுபோலென்றால் நீங்களே அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் அவர்களில் சிலர் தப்பித்தவறி பக்கமிருக்கும்பள்ளிக்கு வந்தால்சேர்த்துக் கொள்ள மறுக்கிறீர்கள். பக்தியை விரும்பி கோயிலுக்கு வந்தால் சுவாமி தீட்டுப்பட்டு விடுமென்று அடித்துத் துரத்துகிறீர்கள்: பொதுக்கிணறு, குளம் முதலியவைகளில் தண்ணீர் எடுக்கத் தடைப்படுத்துகிறீர்கள். ஆறுகளின் துறைகளில் இறங்கி குளிக்க மறுக்கிறீர்கள். பொது ரஸ்தாவில் நடக்கவிட மாட்டோமென்கிறீர்கள்.தொழில்களிலெல்லாம் தடைகட்டி வைத்திருக்கிறீர்கள். பொது பள்ளியிலும் கோயில் பள்ளியிலும் உங்கள் நாட்டு வித்துவான்கள் எல்லாருக்கும் இலக்கணம் சொல்லிக் கொடுப்பதில் ஆட்சேபிக்கிறீர்கள். ராஜா சர் அண்ணாமலைப்பிரபுவின்பள்ளியில் கூட சமய தத்துவ சாஸ்திரப் படிப்பின் வகுப்பில் தடை ஏற்படுத்தி வைத்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் சேர்த்தே, தண்ணீரில் விழுந்து உயிர் தப்பிக்க பக்கத்துப் படகைத் தொத்தினால் கையைவெட்டுகிறவர்கள் உண்டா என்கிறார். இங்கிலீஷ் சட்ட ஞானவல்லவர்களே! இங்கிலீஷ் புரொபஸர்களே! எம். எல். ஸி. அவர்களே! ஸ்தலஸ்தாபன மெம்பர்களே! பிரசிடெண்டு அவர்களே! ஜமீன்தார்களே! உண்டிகை பாங்குக்காரர்களே! தன்னைத்தான் பெரிதாக நினைத்துக்கொண்டிருக்கும் தனவான்களே! இதற்கென்னபதில் சொல்லுகிறீர்கள்.

பின்னும் அவர் சொன்னதாவது:- எனக்கு முன் பலர் கூறியிருப்பதையே நான் கூறுகிறேன்.பெரியாராகிய காலஞ்சென்ற திரு. கோக்கலே கூறிய பின்வரும் அரிய வாக்கியங்களை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். ஜன சமூகத்தில் பிறரைப் போலவே சரீரம்படைத்து உணர்ச்சியனைத்தும் யாவும் ஒரே மாதிரியாக வுள்ள ஒரு சமூகத்தினரை ஆயுள் காலம் முழுவதும் கேவலமான வாழ்க்கை வாழ்ந்து அடிமையாகவிருக்குமாறு நிர்ப்பந்தித்து அவர்கள் முன்னேற சாத்தியமில்லாமல் செய்வதைவிட கேவலமான மிருக சுபாவம் கிடையாது என்று அவர் சொன்ன இந்த உண்மையான வாக்கியத்தால் மிருக சுபாவம் நம்மிடம் குடிகொண்டிருப்பதை எடுத்து விட்டு நாமும் மனித சுபாவத்துடன் வாழவேண்டாமா? அவருடன் சமமாக உட்கார்ந்து அவர் கவர்ன்மெண்டினிடம் வாதம் செய்யும் மேன்மை தங்கிய சட்டசபை மெம்பர்களே! அவரை விருந்தாளியாக வரவேற்றும் அவர் கவர்ன்மெண்டு விருந்தாளியாக விருந்தும் அவருடன் கைகுலுக்கும் கனம் பொருந்திய இந்து ராஜாக்களே! பிரபுக்களே! இதற்கொரு பதில் சொல்லுங்கள் உங்களுக்கும் உங்கள் சமூகங்களுக்கும் மிருக சுபாவங்களிலும் கொடிய சுபாவங்களிருப்பதற்கு வெட்கமில்லையா யென்பதை நாமே கேட்டுக் கொள்வோம். இந்துக்களாகிய நாம் இந்த மிருக சுபாவத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் எந்த சமூகங்களும் நம்மை மதிக்காது.மனிதனைமனிதன் மதிப்பான்.நமது அறிவாளிகளாலும் அன்னிய அதிகாரிகளாலும் இகழ்ந்துரைக்கப்பட்ட மிருகக்குணமும் அதிலும் எந்த மிருகத்தினிடமில்லாத மிருகக்குணமும் நம்மிடத்தில் வைத்துக்கொண்டிருப்பதினால் எல்லா தேசத்திலும் நம்பெருமைக் சிறுமைப்படுகிறது.

பின்னும் வைசிராய் இவ்வாறு எவ்வளவு முறை எடுத்துக்காட்டினாலும் அதை நீங்கள் சுலபமாக உணருவதில்லை. இருந்தாலும் எனக்கு முன்னிருந்தவர்கள் எடுத்துக்காட்டியதை நானும் மறுமுறை வற்புறுத்துவது அனுவசியமாகாது என்று வற்புறுத்தி, எச்சரிக்கையும் செய்கிறார். நமக்கு எத்தனை தடவை எடுத்து யார்சொன்னாலும் ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்கு அடிமையைப்போல் சுயபுத்தியில்லாமல் நம்பிக்கை யற்றவர்கள் போல இப்போதைய ஜீவிதகாலத்தை ரட்சித்துக்கொள்ளுவதற்கு ஆயுதமாக இருந்த தந்திரம், வஞ்சகம், கபடம் இவற்றைக் கையாளவே பழகி சுயநல சொரூபமாக விளங்குகிறோம். பலசாலிகளின் பாதத்துளிகளைத்தாங்குகிறோம். ஆயினும் நம்மிலும் பலவீனர்களை மரிக்கும்படித் தாக்குகிறோம். அவலட்சணத்தோடு கூடின பேய்த்தனமானமூடக்கொள்கைகளை விடாமல் நமக்கு அந்நியமாக யா

(இதின் தொடர்ச்சி 15-ம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—சுந்தர காண்டம்

கட்டுரை—9

(திரு: சந்திரசேகரப் பாவலர்)

சருக்கங்கள் 37 முதல் 38 வரை:-

சீதை அநுமானை நோக்கி, "இராமன் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறனென்றாய். இந்நிலையில் ஏழைமனிதனுக்கும் இராமனுக்கும் என்ன வேறுபாடு? விதி யாரைவிட்டது? இராவணன் இன்னும் இரண்டுமாதத்துள் என்னைக்கொன்று விடுவான்; ஆதலின் அதற்குள் என்னை மீட்கச் சொல். வீடணன் எவ்வளவு நன்மதி கூறியும் இராவணன் கேட்கவில்லை. இந்த செய்தியை வீடணனுடைய மனைவி தன் தலைமகளாகிய அனலை மூலமாக எனக்குச் சொல்லியனுப்பினாள்" என்று கண்ணீர் விடுத்தாள். அனுமான், "அம்மா! உன்னுடைய கவலையை இப்போதே போக்குகிறேன். என் முதுகில் ஏறிக்கொள். உடனே இந்நொடியிலேயே உன்னை இராமனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்று கூறினான். சீதை, "சிறு உருவத்தையுடைய நீ எங்ஙனம் இது செய்யவல்லை" என்று வினவினாள். அனுமான் தன்னுடைய வல்லமை தோன்ற மரத்திலிருந்து குதித்துவளர்ந்த பேருருவுடன் நின்றான். அவன், 'இலங்கை முழுதுமே தூக்கிச்செல்லும் ஆற்றலுடையேன். என் முதுகில் ஏறிக்கொள்,' என்றான்.

சீதை, 'உன் ஆற்றல் உணர்ந்தேன். ஆனால் நான் உன்மேல் ஏறிப்போகும்போது வேகத்தைத் தாங்கமாட்டாமல் கடலில் வீழ்ந்து இறப்பேன். மேலும் உன்னை அரக்கர் தொடர்வரேல் உன்னையும் என்னையும் பாதுகாத்து அவர்களோடு போர்புரிய உன்னால் முடியாது. மற்றும் இது இராமனுடைய புகழுக்கும் கேடாம் அதனால் அவனை அழைத்து வந்து என்னை மீட்கச்செய். மேலும் என்னுடைய கணவனைத்தவிர மற்றைய ஆண்மக்களை நான் தொடக்கூடாதல்லவா? இராவணன் என்னைத் தொட்டெடுத்துவரவில்லையா என்றால் நான் துணையில்லாமல் தன்னந்தனியேயிருந்தேன். இராவணனோ எல்லா ஆற்றலுமுடைய ஆண்மகன். அவன் வலிய என்னை இழுத்தான். காப்பாற்றின்றி தன்வயமற்ற நான் என்ன செய்வேன்? இராமன் முன்பல அரக்கரைத் தனி நின்று கொன்றதைக் கண்டுளேன். ஆதலின் இராமனை இங்கே அழைத்து வா அதுவேசிறந்த செயல்" என்று கூறினள். "அநுமான் இராமனிடத்தில் வைத்த அன்பால் உன்னை இப்போதே அவனிடம் சேர்க்கவேண்டுமென்ற ஆசையால் இப்படிச்சொன்னேன். மேலும் என்னை தவிர வேறொருவராலும் இச்சேவை இயலாது. அதனால் நான் உன்னைப்பார்த்ததற்கு அடையாளமாக நம்புமபடி சில அடையாளங்களைக் கொடு" என்றான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

"இந்நிலையில் ஏழைக்கும் இராமனுக்கும் என்னவேறுபாடு? விதி யாரைவிட்டது?" என்று சீதை புலம்புகிறாள். இதனால் சாதாரண மனிதரினும் கடையனாகிய இராமனை, பெண்டாட்டியை இழந்து அழுது புலம்பித் திரிந்த இராமனை தெய்வத்தின் தோற்றமானவனென்று ஆரியர் கூறுவது உலகை ஏமாற்றும் பொய்யேயொழிய வேறென்னும்? அவனுடைய மனைவியே அவனை ஏழைமகனுக் கொப்பான் எனக் கூறுகின்றனள். இதனால் தெய்வமென இராமனை அவள் கூறினளென காணப்படுவதெல்லாம் பிற்காலத்திய ஆரியப் பார்ப்பனர் இடைச்செருகலே என்ற உண்மை தெளிவாகிறது.

வீடணன் இராவணனுக்கு நன்மதி கூறின செய்தியை அவன் மகள் அனலை வந்து சொன்னதாகச் சீதை கூறுகிறாள். இதனால் திரிசடைவேறு அனலை வேறென்பது தெரிகிறது. திரிசடையை வீடணன் மகளென வால்மீகி தெளிவாகக் கூறவேயில்லை. அவளை மிகவும் கிழப்பருவமுடையாளெனவே கூறுகிறார். வீடணனும் அவனுடைய குடும்பத்தாரும் அந்தரங்கமாகச் சீதையிடம் நட்புப் பாராட்டி வந்ததாகத்தெரிய வருகிறது. அதனால் வீடணன் தனது அண்ணனாகிய இராவணனுக்குக் கேடு சூழ்ந்து 'எதிரி எப்போது வருவான். நான் அவனோடு சேர்ந்து இராவணனைக்கொன்று அரசைப்பெறலாம்' என எண்ணிக் காலம் பார்த்திருந்த பாவியென்பது வெளிப்படை.

அநுமான் சீதையைத் தன் முதுகில் ஏறிக்கொள்ளச்சொல்லுகிறான். அவள் இராவணனுடைய பேராற்றலை உணர்ந்தவளாகையால் மறுத்துரைக்கிறாள். அவள் தான் மறுத்துரைப்பதற்குக்காரணமாக தன்னைப் பிற ஆடவர் தொடலாகாதென்று கூறுகிறாள். அநுமான் எங்கே உன்னை இராவணன் தூக்கி வரவில்லையா என்று கேட்டு விடுவானோ என அஞ்சி அவள் தான் பெண்பால் பலமில்லாதவள், பலமுள்ள இராவணன் தூக்கும்போது நான் என்ன செய்வேன்?" என்று கூறுகின்றாள். சாபமிட்டு எரிக்க ஆற்றலுடையவளாகக் கூறிக்கொள்ளும் அவளுடைய ஆற்றல் அப்போது எங்கே போயதோ? இராமன் அதற்கு ஆணைதரவில்லையாம்! எவனாவது வலிய இழுத்துக்கொண்டு போனால் அவனோடு போவதற்கு மட்டும் அவன் ஆணை தந்திருந்தனனோ?

அநுமான் சீதையினுடைய அழகில் ஈடுபட்டு அவளைத் தன்தோளில் ஏறிக்கொள்ளச் சொல்லுகிறான். அதனை அவள் உணர்ந்துகொண்டு மறுத்துரைத்துத் தன் மறுப்புரைக்குவேறு காரணம் சொல்ல, அநுமான், "இராமனிடத்தில்வைத்தஅன்பால் உன்னை இப்போதே அவனிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்ற ஆசையால் இப்படிச் சொன்னேன்" என்று கூறிமழுப்புகிறான்.

அநுமான் மரத்திலிருந்துகுதித்து வளர்ந்தனனும், இவன் முன்னரே கீழே இறங்கி மெல்லமெல்லச் சீதையை நெருங்கியதையும் அவன் நெருங்க நெருங்கச் சீதை நடுங்கியதையும் முன்னர் கண்டோம். இச்செய்தி அதற்கு மாறாக உள்ளது இம்மாறுபாட்டைக் கண்ட உரையாளர் நரசிம்மாசாரியார் முன்கீழே இறங்கினனென்பது மரத்தின் உச்சியிலிருந்து கீழ்க்கிளைக்கென கொள்ளவேண்டும் எனக்கூறி மழுப்புகிறார். ஒருவன் நீளுவதும்குறுகுவதும்என்பது எப்படி இரும்பா தங்கமா நீட்டவும் குறைக்கவும்? இவையெல்லாம்மயக்குரைகளேயாகும். இவை உலகை ஏமாற்றும் போலியுரைகள். இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

அநுமான் சீதைக்குஇராமன் அவளைப்பிரிந்தபின் நிகழ்ச்சிகளைக் கூறுபவன் சடாயுமடிந்தபின் கோதாவரி ஆற்றையும்மலையையும் மான்களையும் நோக்கி அவளிருக்குமிடம் கூறுமையார்? அவைகளை அழிப்போனென்று கூறினதாகக்கூறுகிறான். இது கம்பர் போக்கு, ஆனால், கம்பர் இந்நிகழ்ச்சியை முன்னர் கூறவில்லை. இதனால் கம்பர் முன்னுக்குப் பின் முரணாகக் கூறுகின்றார். இவருடைய நினைவு இருந்தவாறு மிக அழகிது. ஆனால் இந்நிகழ்ச்சியை வால்மீகி கூறுகிறார். அவர்கூற்றுப்படி இது சடாயுவை இராமன் காணு முன் நிகழ்ந்தது. இதனால் இப்பாடல்கள் (உருக்காட்டு படலம் 85, 86, 87, (கம்பரால் பாடப்பெற்றனவோ அன்றி வால்மீகியைப்படித்த ஒருவரால் இடம் தெரியாமல் இடையே செருகிவைக்கப்பெற்றனவோ!

வீடணனுடைய மகள் அனலையைப்பற்றிச் சீதை கூறிய செய்தியைக் கம்பர் மறைத்தார். மேலும் அநுமான் தன்மேல் அவளை ஏறிக்கொள்ள வேண்டியபோது சீதை வினவ அவன்தன்பேருருக்காட்டினனென வால்மீகி கூற கம்பர் அதற்கு முன்னரே அவள் வினவ அவன் காட்டினனெனக் கூறுகிறார். சீதை அவ்வுருக்கண்டு அஞ்சி அவனைச்சுருக்க வேண்ட அவன் உருச்சுருக்கினன் என்று கம்பர் கூறுவது வால்மீகி கூறாததே.

இராவணன் தன்னை மடியில் வைத்துக்கொண்டு வந்ததற்குக்காரணம் அவன் வலியுடைமையே எனச் சீதை கூறினதாக வால்மீகி கூறுகிறார் கம்பரோ தம் முன்னைப்புரளிக்கேற்ப அவன் தன்னைத்தொடாது குடிசையோடு தூக்கி வந்தனனெனக்கூறி அகத்தசிறுப்பாக அக்குடிசையைச் சீதை காட்டினளெனவும் கூறி மகிழ்கிறார். இத்துடன் கம்பர் நின்றாரல்லர். இராவணன் தன்னைத் தொடாததற்குக் காரணம் அவன் வேறு பெண்களைத் தொட்டால் அவன் தலை வெடிக்குமென நான்முகனிட்ட சாபமுளதென்றும், அதை வீடணன் மகள்தன்னிடம் கூறினளென்றும் சீதை அநுமானிடம் கூறுவதாக அவர் கூறுகிறார். இவ்வாறு யாண்டையதோ? கம்பர் தம் பொய்ம்மைக்கும் ஓர் அளவுண்டோ? இதைக்கேட்டு அநுமான் சீதையிடம் கொண்டிருந்த ஐயம் நீங்கி மகிழ்ந்தனனாம்!! இனிமேற் செல்லுதும்.

காப்பிக் குடியை ஒழிக்கும்

**ரேப்பி பவுடர்**

சுகம்! சுகம்!!! சுகம்!!!

கற்ப மூலிகைகளால் செய்தது காப்பி போன்ற மணம் வாய்ந்தது. (வி. பி. வேறு) ½சேர்டின் 3, ரூ.1. டஜன் ½, 1¾

சுகாதார வாசனை விபூதி

டபல் 1, ரூ. 0 12 0

**எஸ். வி. ராஜப்பா,**

ரேப்பி பாக்டரி, பழநி.

**உத்திரவாதம்!**

நம்முடைய திருநேத்திர சஞ்சீவி பல மூலிகைகளைக் கொண்டு சித்தர் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இது காலரா, பிளேக், சுரம், ஜன்னி இவைகளை ஒரு மணி நேரத்திலும், பரு, கண் குத்து, பல் வலி முதலிய சகல வலிகளையும் 5, 6 நிமிஷத்திலும் சுகமாக்கக்கூடிய சஞ்சீவி. ஒரு முறை பரீட்சித்தால் இதன் அபூர்வ சக்தியைத் தெரிந்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2-0-0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

ஆர்.பி. நரசிம்மலு நாயுடு,
191, தெற்கு மாரட் வீதி,
மதுரை.

(75)

# அகில திருவிதாங்கூர் சமூக சீர்திருத்த முதல் மகாநாடு

## ராவ்பகதூர் எம். கே. ரெட்டி அவர்களின் தலைமைப் பேருரை

## வரவேற்புக் கழகத் தலைவரவர்களின் அரியவுரை

## விவேகாநந்தர் "பைத்தியக்கார நாடு" எனக் கூறியதற்குக் காரணம் என்ன?

...மல் இருக்கின்றோம். பார்ப்பனர் சீர்திருத்தக் கருத்துள்ளவர்களாயின், அது எமக்குத் திருப்தியே—நாம் சிறிதெனினும் அவர்கள் சீர்திருத்த முயற்சிக்கு ஊறுவிளைக்கப் போவதில்லை; அது நமது உத்தேசமுமன்று. பார்ப்பனர்கள் எப்பொழுதும் வருணாசிரம தருமிகளாய் இருப்பினும், அவர்கள் பனி உருகிக் கரையாய்க் கடல் சேர்ந்த சலத்தை மீண்டுமெங்கேயோடு திருப்பி பனிக்கட்டியாக்க முயற்சிக்கின்றார்கள் ஆதலால்தான், நாம் அவர்களை விட்டகன்று நிற்கவேண்டியிருக்கிறது; அவர்கள் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்கவும் அவசியமாகின்றது. வருணாசிரம தருமிகள் பார்ப்பனரல்லாதாரில் இல்லையா எனின், இருக்கின்றார்கள். பார்ப்பனரை என்று தென்னிந்தியாவிலிருந்து வருணாசிரம தருமம் ஒழிந்து போய் விடுகின்றதோ அன்று நாம் நம் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ள இயலும். மேலும், நாம் இக்காடெங்கும் சுயமரியாதை இயக்கத்தைப் பரவுதல் செய்ய முனைந்துள்ளோம். சுயமரியாதை இயக்கம் கடவுளையும் கோயில்களையும் அழிப்பதற்காக தோற்றப்பட்டதென நமது பகைவர்கள் அவ்வாறு கூறுகின்றார்கள். உண்மையில் நமக்கு இதைப் பார்க்கிலும் முக்கியமான வேறு வேலை இருக்கின்றது. விரித்துக் கூறப்புகின், கடவுளுக்கும் கடவுளைத் தொழுபவனுக்குமிடையே தரகன் வேண்டாம் என்பதே நமது கொள்கை. இத்தரகுத் தொழில் கோயிலில் நடைபெறினும் சரி, புறத்தே நடைபெறினும் சரி, இப்பொழுதுள்ள நிலைமையில் மடமைக்கும், அநீதிக்கும், அக்கிரமங்கட்கும் இருப்பிடங்களாய் இருந்து வரும் தீய நிலையங்களை, நாம் உண்மைக் கோயில்களாக்க முயல்கின்றோம். எனவே பருத்துக் கொழுத்த சோம்பேறிகட்காக வீணாக்கப்படும் பொருளை, நாம் சாதி வேற்றுமையின்றி கல்விக்கும், சுகாதாரத்துக்கும், ...ம் பாதுகாப்புக்கும் ஈடுபடுத்த விரும்புகின்றோம். மேலும் நம்மவர்கள் கிறிஸ்துவ, இஸ்லாமிய, பௌத்த சமண மதத்தினரை மிக்க அன்புடன் பாராட்டுமாறு வேண்டுகின்றோம்.

எல்லா மதசாத்திரங்களின் சிறந்தபொருளை ஆய்ந்து சேர்த்து,

### வரவேற்புத் தலைவருரை

வரவேற்புக் கழகத் தலைவர் திருவாளர் பி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை வருமாறு:—

சீமாட்டிகளே! சீமான்களே!

வரவேற்புக்கழகத்தின் சார்பாக இங்குக் கூடியிருக்கும் அனைவரையும் நான் மனப்பூர்வமாய் வரவேற்கின்றேன்.

இம் முப்பந்தல் என்னும் ஸ்தலத்தில் முன்னொரு காலத்தில் சேர சோழபாண்டியர்கள் ஒன்றுகூடி அளவளாவினார்கள் என்றும் அது காலை தங்கள் தங்கள் தேசங்கட்கு வேண்டிய எல்லை முறைகளைக் கலந்து பேசிக்கொண்டார்கள் என்றும் பூர்வகதை ஒன்றுள்ளது. அப்பெருமை தங்கிய ஸ்தலமானது, நாம் இன்று கூடியிருக்கும் நாகர்கோயிலுக்கு மூன்று மைல் தூரத்திற்குள் உள்ளது.

சோழ பாண்டியர்கள் மறைந்து போயினர். சேர அரசர் குலந்தான் இன்று வரை திராவிட மக்களாய நமது பண்டைய பெருமைக்குச் சான்றாகத் தழைத்து வந்துகொண்டிருக்கிறது. இச்சேரர் பெருமானின் குடிகளாய் நாங்கள் சோழ பாண்டிய தேசத்திலிருந்து இங்கு வந்திருக்கின்ற உங்களுக்கு எங்கள் மனமுவந்த வரவேற்பை யளிக்கும் பெருமையைப் படைத்திருக்கின்றோம். தாங்களும் அதனை உள்ளக் களிப்போடு ஏற்பீர்களென்று நம்புகின்றேன்.

இந்த மகாநாடு அகில திருவிதாங்கூர் மகாநாடு என்று ஏன் அழைக்கப்பெற்றதெனின், இம்மகாநாடு சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவிலேயே நடைபெறுகின்றதனாலும் திருவிதாங்கூரில் நாகர்கோயில் ஒன்றிலேதான் இத்திவ்ய சங்கம் உளதாகலானும் மேலும் இம்மகாநாடு அரசியல் மகாநாடு அன்றெனவும் பிறர்க்கு விளக்க இப்பெயர் தேவையாகின்றது. மேலும் இம்மகாநாட்டின் கண் நாம் மிகவும் விவாதிக்கப்படும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தைப் பற்றிக்கூட ஆலோசிக்கப் போவதில்லை. நாம் அனைவரும் பார்ப்பனரல்லாதார். இவ்வொரு சமூகம் சீர்திருத்த வேண்டிததான் பார்ப்பனரை நாம் இவ்வியக்கத்தில் சேர்த்துக்கொள்ளா

அதனை நோயாளிகள், அங்கஈனர்கள், அபலைகள் இவர்கள் பாதுகாப்புக்கும், கல்விக்கும், ஏழைகட்கும் செலவிட விழைகின்றோம். குடிவகைகளையும் மயக்க வஸ்துக்கள் பலவற்றையும் மிகுந்த வரிக்குட்படுத்தி, அவ்வழி வருமானத்தைக்கொண்டு உயர்தரக் கல்வியையும், ஏழைமக்கள், வரி கொடுப்போர் இவர்களின் தொடர்பில்லாத மற்றைத்துறைகளையும் அபிவிருத்தி செய்யக்கருதுகின்றோம். சமூகத்தைப் பொருட்படுத்தாத ஒரு கோயிலை நாம் மதிக்கவே கூடாது என்பது நமது கருத்து. மேற்கூறிய முறைகளைப் பார்க்கினும், ஒருவருடைய கடவுளை அழிப்பதைப் பார்க்கினும், அல்லது காப்பாற்றுவதைப் பார்க்கினும், நாம் மிக உயர்ந்ததாகக் கருதியிருக்கும் கருமம் சாதி வேற்றுமையை அழிப்பதேயாகும்.

இதைப்பற்றியே இம்மகாநாடு முக்கியமாகத் தன் கவனத்தைச் செலுத்தும். சாதி வேற்றுமைக் கொள்கையை அப்படியே கையாள்வதா, இல்லையானால் தகர்த்தெறிவதா என்பதுவே இம்மகாநாட்டின் மூலமாய் விடையிறுக்கப்படும் முக்கியமான கேள்விகளாம்.

நமது அன்பிற்குரிய தலைவர் திருவாளர் ஈரோடு இராமசாமி அவர்கள் (அவர்கள் மலாய் நாட்டில் உள்ள நமது சகோதர சகோதரிகள் விருப்பத்திற்கிணங்கி அங்குச் சென்றிருப்பதனால் இங்கு விஜயம் செய்யக் கூடவில்லை) அடிக்கடி இச்சுயமரியாதை இயக்கம் ஓர் புதிய இயக்கம் அன்றெனச் சுட்டிக் காண்பித்திருக்கின்றார். இது மிகத்தொன்மையை உடையது. கௌதம புத்தர் காலத்திற்கு முன்னர்கூட இவ்வியக்கம் வெற்றியுடன் இயங்கிவந்து கொண்டிருந்ததென்று கூறலாம். இதன் சரிதம் ஏற்றத்தாழ்வை உடையது. எனினும் இது ஓய்ந்து போய் விடவில்லை. சமூகம் உள்ள வரையில் சீர்திருத்தமில்லாமலிருப்பது எங்ஙனம்?

சுயமரியாதை இயக்கம் நம்மை வேண்டுவதென்ன? அது நம்மை அறிவுடன், கருணையுடன், உணர்ச்சியுடன் இருக்கக் கூறுகின்றது.

உலகப் பிரசித்திபெற்ற மகத்துவமிக்க இந்தியத்தாயின் செல்வப் புதல்வர் இந்தியாவின் தத்துவ அறிவின் இணையிலாப்பெருமையை உலகத்திற்கெடுத்துக் காண்பித்த சுவாமி விவேகாநந்தர் இந்நாட்டைப்பற்றி என்ன கூறினார்? வைதிகட்கு அந்தமான் தீவுகள் போலவே இச்சேரநாடும் பைத்தியக்காரர்கள் நாடாயிருக்கின்றது என்றுதெரிவித்தார்.

இப்பழிச் சொல் நம் நாட்டுக்கேற்பட்டு ஒரு தலைமுறைகூடக் கடந்துவிட்டது. ஆனால் இன்றைக்காவது அத்தகைய நிலைமை இங்கு இல்லையென்று நம்மீது சுமத்தப்பெற்றபழிக்குப் பரிகாரம் தேடிக்கொள்ளக் கூடுமா?

தீண்டாமை அகன்றபாடில்லை; ஆனால் அது வலங்கொண்டு முன்னையினும் அதிகமாகவே பரவி நிற்கின்றது. சென்னைப்பட்டினத்தில் ஒரு வழக்கு நடைபெற்றபோழ்து வேளாளகுலத்துச்சாட்சி ஒருவர் மற்றொரு இழிந்தவேளாளர்க் குலத்தினரைத் தொடக்கூடமாட்டேன் என்று தெரிவித்தார். இதைப்பற்றி சீ. பி. சதாசிவ அய்யர்,

"மதக்குற்றம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினால் இவ்வுணர்ச்சி உண்டாகவில்லை; சாதி உணர்ச்சியின் தீவிரத்தாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது; சாதி, உணர்ச்சியை கொஞ்சகாலமாக வகுப்புணர்ச்சியும் பலப்படுத்தி வருகின்றது"

என்று கூறியிருக்கின்றார். இந்த, சமூக சீர்திருத்தக்காரர்கள் மூடப்பழக்க வழக்கங்களையும், சாதிச் செருக்கையும், சாதித் தடையையும் ஒழித்துவிடவேண்டுமென்று தொண்டைவரைக் கத்திக்கொண்டிருக்கிறபோது இத்திருவிதாங்கூரில் கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் சிறிது அறிவுடைமையைப் புகுத்தினார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாம். இதற்குச் சான்றாக பண்டு நடைபெற்ற இரண்டொரு நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

### மேலாடை தரித்தல்

மேற்குக்கரையில் உள்ள பெண்கள் தங்கள் அரைக்கு மேற்பாகத்தை துணியால் மூடிக்கொள்ளுவது முகமதிய நாகரீகத்தால் ஏற்பட்டதென்று கூறப்படுகிறது. திருவனந்தபுரத்தைக் கைப்பற்றிய ஒரு முஸ்லீம் சர்தார்; அங்குள்ள 'சூத்திரப்' பெண்கள் ஆண்களைப்போலவே உடுத்திக்கொள்ள வேண்டுமென்றும் வட்டமலையாளத்துப் பெண்களைப்

போல் மேலாடையின்றி வெளிச்செல்லலாகாதென்றும் கட்டளை விதித்தார். "சூத்திரர்களில் உயர் வகுப்புப்பெண்கள் தங்கள் மேற்பாகத்தை அன்று முதல் ஆடையால் மறைத்துக்கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொண்டனர் என்று சரித்திரம் கூறுகின்றது.

கீழ்தர சூத்திரர்கள் தங்கள் மேற்பாகத்தை மூடிச்செல்லல் கூடாது மேற்பாகத்தை துணிகொண்டு மறைப்பது என்பது தங்கள் விசேட உரிமைதான் என்று உயர்தர சூத்திரர்கள் வற்புறுத்திவந்தார்கள்.

மேலாடையால் சேர்ந்த சச்சரவுகளைப்பற்றி உத்தியோகப் பார்ப்பனன் வரைந்துள்ள சரித்திரம் கூறுகின்றது:—

"தென் திருவிதாங்கூரில் லண்டன் கிறிஸ்தவப் பிரசாரச் சங்கம் ஒன்று திருவிதாங்கூர் அரசாங்கத்தின் அனுமதி பெற்று வேலை செய்து வந்து, நாஞ்சில்நாட்டில் தனது மதத்தைப் பரப்பி நிலைநாட்டியது என்று நாம் கூறுவோம். சாணார் வகுப்பிலிருந்து கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் (கிறிஸ்தவர் பிரசாரர்கள் பெரும்பாலும் 'கீழ்த்தர' வகுப்புக்களாய் சாணார், பறையர், இவர்களையே தங்கள் மதத்தை ஏற்கும்படிச் செய்தவர்) உயர்தர வகுப்பினரைத் தம் புறத்தத் தலைப்பட்டார்கள். சாணாரக் கிறிஸ்தவப் பெண்கள் உயர்தர சூத்திரப் பெண்களைப்போல் மேலாடை அணியத் துவக்கிவிட்டார்கள். கீழ்ஜாதியார் மேலாடை அணிதல் கூடாதென்பது புராதன வழக்கம். 1829ல் இக்கிறிஸ்தவப் பெண்கள் ரவிக்கையாவது குப்பாயமாவது அணியலாம் என்று கர்னல் மன்றோ ஒரு உத்திரவு போட்டார்.

ஆனால் இந்த கிறிஸ்தவப் பெண்கள் உயர்தர வகுப்பினரைப் போலவே மேலாடை அணிவோமன்றி ரவிக்கை குப்பாயம் அணியமாட்டோம் என்று பிடிவாதம் செய்தனர். எனவே, வெளியே செல்லும் போழ்தெல்லாம் இவர்கள் ஒரு குப்பாயத்தைத் தரித்து அதன் மீதும் ஒரு அங்கவஸ்திரத்தைத் தரித்துச் செல்லத் தலைப்பட்டனர். இதனைக்கண்ட உயர்தர வகுப்பைச் சார்ந்த நாயர்கட்கும் மற்ற சூத்திரர்கட்கும் கோபம் உதித்து, அவர்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்கலாயினர் சூத்திரர்கள் தெருவில் வரும் மேலாடை தரித்த சாணாரப் பெண்டிரைத் தாக்கினர். சாணார்களும் சூத்திரரைத் தாக்கினர். 1858ல் இச்சச்சரவு மிகவும் முதிர்ந்துவிட்டது."

இதன்பேரில் திவான் சர். டி. மாதவராவ், பழைய வழக்கத்தை மீறக்கூடாதென்றும், இதில் மாறுதல் விரும்பினால் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு சர்க்காரால் இதற்கென சட்ட சீர்திருத்தம் செய்துகொண்டு பிறகே அவ்வாறு செய்தல் வேண்டுமென்றும் உத்திரவு போட்டுவிட்டார்,

இவ்வுத்திரவு கிறிஸ்தவப் பிரசாரர் நியாயமானதென்று கருதவில்லை. திவான் உயர்தர வகுப்பாரை வெளிப்படையாக ஆதரிப்பதாகவே கருதினர். பிறகு முதலாக மகாராஜாவுக்கும், பின்னர் சென்னை அரசாங்கத்திற்கும் இக்கிறிஸ்தவப் பிரசாரர்கள் மனுச்செய்து கொண்டனர். இதன்பேரில் அக்காலத்தில் சென்னை கவர்னராய் இருந்த சர் சார்லஸ் டிரவிலின் என்பவர் திருவிதாங்கூர் பிரிட்டிஷ் ஸ்தானீகருக்குப் பின்வருமாறு எழுதினர்:—

"உண்மை, நியாயம், மனித அபிமானம், எல்லாருமே இதில் சம்பந்தமிருக்கின்றது. இச்சமயம் நாம் உறுதியாக நிற்காவிட்டால், நாகரீக உலகம் நம்மைத் தூற்றும். பிரிட்டிஷ் குடிகள் பிறரின் உரிமையைப் பாதிக்காமல் நடந்துக் கொள்ளும் வரையில் பிரிட்டிஷ் குடிகட்கும் திருவிதாங்கூரில் எல்லாவிதமான சுதந்திரங்களும் அளிக்கப்படும் என்னும் மகாராஜாவின் விளம்பரத்தைக் கொண்டே ஒரு வகுப்பினரை மிகவும் கொடுமையாக நடாத்த சூழ்ச்சி செய்யப்படுகிறது.

நீர் இந்த காலத்திற்கு இது ஏற்றதல்லவென்றும் ஒரு அறிவுடைய திவான் இவ்வாறு செய்தல் கூடாதென்றும் அவருக்கு எடுத்துரைப்பீராக."

இதன்பேரில் ஸ்தானீகர் மகாராஜாவை வற்புறுத்தி, மகாராஜா மீண்டும் ஓர் விளம்பர மூலமாக மேலாடை தரித்துக்கொள்வதில் எல்லோருக்கும் சுயேச்சை உண்டென்றும், ஆனால் கீழ்த்தர வகுப்பினர் உயர்தரப் பெண்களைப் போலவே மேலாடை தரிக்கலாகாது என்றும் பிரசாரம் செய்தார் இதுவே இன்றுவரை திருவிதாங்கூரின் சட்டம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சுவாமி விவேகானந்தர் இந்நாட்டைப் பைத்தியக்காரர்கள் நாடென்று அழைத்ததேன் என்பதைப்பற்றியே இதுவரை ஆராய்ச்சி செய்தோம்.

## நாடார் இந்துக்கள்

நாடார் கிறிஸ்தவர்களின் மனித உரிமைகட்காக மட்டுமன்றி வெள்ளைக் கிறிஸ்தவப் பிரசாரர்களே நாடார் இந்துக்களின் அடிப்படையான உரிமைகட்கும் பாடுபடலாயினர். நாடார் இந்துக்கட்காகக் கிறிஸ்தவப் பிரசாரர்கள் பரிந்துவருவது அவர்களையும் கிறிஸ்தவர்களாக்கவே என்று 'பயந்தே' இந்துக்கள் சந்தேகிக்கலாயினர், திவான் சர். டி. மாதவராவின் கீழிருந்த திருவிதாங்கூர் அரசாங்கம் எப்பொழுது இது விஷயமாய் "திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டின் முடிவின்படி இப்பொழுது நாடார்கள் மேலாடை உடுத்தும் உரிமையை இங்கும் கையாளத் தலைப்படுவார்கள். தங்கட்கு இதில் குறையில்லாமலிருக்கையிற் கூட கிறிஸ்தவ நாடார்கள் இதில் தலையிடுகின்றார்கள் | இவர்கள் பெண்கள் குப்பாயம் உடுத்திக் கொள்ளலாமென்று அரசாங்க விளம்பரம் புரியப்பட்டுள்ளது. மேலும் குப்பாயம் மேலாடையைப் பார்க்கிலும் நாகரீக உடையாக எல்லோராலும் கருதப்படுகிறது" என்று பிரசாரம் புரிந்திருக்கின்றது. அரசாங்கத்தின் பாரு ஒருநுட்பத்தை வெளிப்படுத்தியது. அதாவது, கிறிஸ்தவ நாடார்ப் பெண்டிராயினும் ஒரு உடைகொண்டு தம் உடம்பை மறைத்துக்கொள்ளலாம். கிறிஸ்தவர்களாக மாறாத நாடார்ப் பெண்டிர் இவ்வுரிமைக்கு இலக்கானவர்களல்ல என்பதுவே. இதன்பேரில் இந்து நாடார்கள் சென்னையில் இர்வின் பிரபு கூறியபடி தம் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளத் துவக்கினர். கிறிஸ்தவர்களாகாமலேயே தம் பெண்டிரும் மேலாடைதரிக்கும் உரிமை தமக்கு அளிக்கப்படவேண்டுமென வற்புறுத்தினார்கள். இத்துக்ககரமான சரித்திரத்தைப்பற்றி நான் விவரிக்க விரும்பவில்லை. ஆனால் இப்போராட்டத்தை வெள்ளைக் கிறிஸ்தவப் பிரசாரர்களே ஏற்றுக்கொண்டு வழக்கை பிரிட்டிஷ் அரசாங்கம் வரையிற் கொண்டுபோய், கிறிஸ்தவர்கட்கும் இந்துக்கட்கும் வெற்றியளித்தனர். கிறிஸ்தவர்களாக மாறாமல் உரிமைக்குப் போராடிய இந்து நாடார்கள் போல்ஷ்விக்குகளாகவும் துரோகிகளாகவும், சதியாலோசனைக் காரர்களாகவும் சாதி இந்துக்களால், பாவிக்கப்பெற்றனர். இந்துக்களென்று கூறிக்கொள்வார்களாயின், இந்துக்கள் பழக்கமாகக் கருதப்படும் அநாகரீக நடையினன்றோ இவர்கள் பெண்டிர் உலாவவேண்டும்? ஆனால் கிறிஸ்தவப் பிரசாரர்கள் தங்கள் அரசியல் வலிமையையும் பெருமையையும் இவ்வழக்கில் நிலைநாட்டிக்கொண்டதுடனின்றி, இந்து நாடார்கட்கும் தாழ்த்தப்பட்ட எல்லா வகுப்பினர்க்குமே மனிதர்கட்குள்ள உரிமைகளை வழங்கினார்கள். எனவே சாதி இந்துக்கள் தங்கள் மதத்திற்கும், அறியாமைக்கும் சாதி வேற்றுமைக்கும் இரங்காமல், கிறிஸ்தவப் பிரசாரர்கள்மீது துவேஷங்கொண்டனர்- புருஷன் அடித்ததினால் மனைவிக்குக் கோபம் வரவில்லையாம்; அடிக்கும் பொழுது புன்னகையுடன் மாமி அதனைப் பார்த்துக்கொண்டிருந்ததனால் தான் அவளுக்குக் கோபம் வந்ததாம்.

ஆனால் இச்சாதி இந்துக்களின் நிலைமைதான் இன்று எவ்வளவு உளது?

## திருவிதாங்கூர் சாதி இந்துக்கள்

"ஹைதராபாத் ஒரு முகம்மதிய சமஸ்தானமாயிருந்தும், அதில் முகம்மதியர்கள் எவ்வளவு குறைந்திருக்கின்றனரோ அதைப்பார்க்கிலும் இந்து சமஸ்தானமாகிய திருவிதாங்கூரிலும் இந்துக்களின் நிலைமை மிகத்தாழ்ந்தே இருக்கின்றது" என்று பார்ப்பனச் சரித்திரக்காரர் ஒருவர் கூறுகின்றார். இது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

யாருக்காக இவ்விந்து மதத்தை இவர் வேலியிடுப்பாதுகாக்க முயலுகின்றார் என்று கேட்கு முன்னர் இவர் இந்த நிலைமைக்கு என்ன காரணம் கூறுகின்றார் என்பதை நோக்குவாம்.

"சாதி வகுப்பு வேற்றுமைகளும், சாதிக்குள் சாதி, வகுப்புக்குள் வகுப்பு இத்தகைய வேற்றுமைகளுமே இந்நிலைமைக்குக் காரணங்களாம். கீழ்த்தர வகுப்பினர் மதமாற்றத்தினால் ஒன்றையும் இழக்கப்போவதில்லை. சாதகத்தையே அடைவார்கள். தாங்கள் பிறந்தமதத்தை நீத்து . அனுசரிப்பதனால் நீடித்த தாழ்ந்த நிலைமையும் தமக்கு ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். இதனாற்றான் இவர்கள் வெள்ளைப்பாதிரிகளின் போதனைகளுக்குட் பட்டு பழைய நாகரீகத்தின் கொடுமைகளிலிருந்தும் கரையேறினர். இப்பொழுது இக்கிறிஸ்தவப் பிரசாரர்கள் இச்சமஸ்தானத்தை விட்டகன்றுவிடுவார்களாயின் மீண்டும் அவர்கள் பண்டைய எழ்மைக்கும், அடிமைத்தன்மைக்குமேயே திரும்பிவருதல்வேண்டும் இவ்வாறு காலுக்குக்கால் இந்து சமூகம் தொகையில் அவசியம் குறைந்தேதீரும். தாழ்த்தப்பட்ட புறக்கணிக்கப்பட்ட வகுப்பினர் அனைவரும் ஒரு காலத்தில் கிறிஸ்தவமதம் சார்வது திண்ணம்" என்று இச்சரித்திரக்காரர் எழுதுகின்றார்.

சென்னை நகர பரிபாலன சபைத் தலைவரும், பார்ப்பனரல்லாதார் பெருந்தலைவருமான திரு. ஏ. இராமசாமி முதலியார் திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சொற்பெருக்காற்றியபோழ்து, "இந், பாகத்தில் கூட தமது மூதாதைகளின் மதத்தை விட்டுப் புறம் சார்வது இந்து மதத்திற்கு ஓர் பெரும் அபவாதமே. இதில் என்னகுறை உளது? நான் இந்த மதம் உயர்ந்தது அந்த மதம் தாழ்ந்தது என்னும் கருத்துடன் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. ஆனால், மற்ற பாகங்களைப் பார்க்கிலும் இப்பாகத்தில் மட்டும் தமது மூதாதைகளின் மதத்தை விட்டுப்புற மதம் சார்வானேன் என்று தான் கேட்கின்றேன்" என்று கூறினார். இதற்கு விடை திருவிதாங்கூர அரசாங்கத்தின் உபயோகத்துக்காக சரித்திரம் வரைந்த பார்ப்பன சரித்திரக்காரராலேயே தரப்படுகின்றது அச்சரித்திரத்தில் கிறிஸ்தவப் பிரசாரகர்களன்றி தாழ்த்தப்பட்டவர் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருப்பர். கிறிஸ்தவப்பிரசாரர்கள் அவர்கள் சிறு குடிசைகட்குச் சென்று அவர்கட்கு விழிப்பூட்டி வந்தனர். கிறிஸ்தவர்கள் பழைய கோட்பாடுகளைச் சிதைத்தவில்லை. புதிய தொண்டையேற்றினார்கள். தங்கட்கேற்பட்ட துயர்கள், கொடுமைகள் இவைகளை சகித்துக் கொண்டே இதில் வெற்றியடைந்தார்கள். தாழ்ந்திருப்பவர்களை உயர்வுபடுத்துவது இந்தியாக்கு புதியதோர் சம்பவமாகும். ஒரு நிபேத மற்ற வெள்ளையர் செய்யும் உபகாரத்தை ஒரு தென்னாட்டு பார்ப்பனன் தாழ்த்தப்பட்டவர்கட்குச் செய்யமாட்டான். காரணமாக இவ்விந்தியா

முழுதும் பார்ப்பனர்களுக்குத் தர்ம சாலைகள் இருக்கின்றன தவிர ஒரு சண்டாளர்க்கு எங்கினும் ஒரு சத்திரம் சாவடி உண்டா? ஏழைகள் தாழ்ந்தவர்கள் தீண்டாமைக்கு இடங்களில் வசிப்பவர்களிடத்தில் சம்மானம் சென்று தாழ்ந்தாரை மேலேற்றும் பெருமை வெள்ளையருடையதாகும். பார்ப்பனர், சாதி இந்துக்கள் இதில் சிறிதும் முயற்சித்தாய் எனக்குத் தெரியவில்லை” எனக் காணப்படுகின்றது. இப்பட்டினரின் கூற்று முற்றிலும் உண்மையே. இது இந்துக்களின் பவித்திர ஒவ்வொரு கோயிற் சுவர்களும் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும் என்பதுவே கருத்து. இப்பார்ப்பன சரித்திராய்ச்சியாளர் இத்தீமையை அகற்றுதற்குரிய முறைகளைக் கூறவில்லாயினும், சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற ஒருப்படுத்தை விட்டுக்கூட சிறிது அசையவில்லை என்பது உண்மை. இந்துக்களின் தொகை குறைந்துவிட்டது. 1901-ல் எடுத்த ஜனத்தொகைக் கணக்கின்படி கிறிஸ்தவர் இராஜ்யத்தில் 7-லட்சம் பேர்களிருந்தனர். இன்று அவர்கள் 14 லட்சம் பேர்களிருக்கின்றனர். நூற்றுக்கு 24 பேர்களாய் இருந்த கிறிஸ்தவர்கள் இன்று 35 பேர்களாக அதிகரித்துக் காணப்படுகின்றனர். இந்துக்கள் இவ்வாறு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வர, இம்மதம் இச்சமஸ்தானத்தில் யாருக்காகக் காப்பாற்றப் படுகின்றது? ஆகவே இங்குள்ள சில ஆயிரக்கணக்கான பார்ப்பனர்களின் பொருட்டு சிறிதளவில் பார்ப்பனரல்லாத இந்துக்களின் பொருட்டாக இருத்தல் கூடும்.

## சாதி இந்துக்களும் கோயில்களும்

இந்துக்கள் சென்ற 30 ஆண்டுகளாக குறைந்து கொண்டு வரினும் கோயில்கள் குறைந்தில. மிகுந்து விட்டன என்று கூறலாம். இங்குள்ள மொத்த ஜனத்தொகையில் சாதி இந்துக்கள் தொகை சொற்பமானது. அதாவது 10 லட்சம் பேர்களிருக்கின்றனர். சாதி இந்துக்களல்லாத இந்துக்கள் 10 லட்சம் பேர்களிருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் 15 லட்சம் பேர்களிருக்கின்றனர். முஸ்லிம் 3 லட்சம் பேர்கள் இருக்கின்றனர். மொத்த ஜனத்தொகை 40 லட்சமாகும்.

30 ஆண்டுகட்கு முன் 1600 இந்துக் கோயில்களிருந்தன. இவைகளனைத்தும் சமஸ்தான பார்வையில் இருந்தன. சமஸ்தானத்தின் பார்வையில்லாத 8000 கோயில்களும் இருந்தன. மொத்தம் சுமார் 10,000 கோயில்களிருந்தனவென்று கூறலாம். இக்கோயில்கள் 10 லட்சம் சாதி இந்துக்களுக்கேயாகும். இத்தகைய பிற்பட்டோர்களென்னும் சாதி இந்துக்களல்லாத 10 லட்சம் பேர்களை அணுக முடியாது. திருவிதாங்கூர் சமஸ்தானமாக இருந்ததிலிருந்து மாறி வருவது கோயில்கள் குறைவினாலல்ல; சடங்குகளின் குறைவாலன்று; சாதி இந்துக்கள் குறைவாலன்று; பார்ப்பனர்கள் குறைவாலன்று.

இன்றைக்கும் திருவிதாங்கூர் ஒரு சமஸ்தானமாக இருப்பதெல்லாம், சாதி இந்துக்களாலல்ல; இது சாதி இந்துக்களல்லாதவர்களாலேயே இயன்றதாய் இருக்கின்றது. சாதி இந்துவாய் இருப்பதிலும், தன் சமஸ்தானம் இந்து சமஸ்தானமாய் இருப்பதிலும் பெருமையடைக்க விரும்பும் ஒவ்வொரு சாதி இந்துவும், தனக்கு அத்தகைய பெருமை அருளுதற்காக சாதி இந்துக்களல்லாதவர்களின் கால்களில் விழுந்து வணங்க வேண்டும். இதை நான் அதிகமாக வலியுறுத்திக் கூற முடியாது. இன்றைக்கு இச்சமஸ்தானம் ஒரு இந்து சமஸ்தானமாய் இருப்பது இங்குள்ள நாகரீகத்திற் சிறந்த வகுப்பினரான ஈழுவ வகுப்பினராலேயேயாம்.— அறிவின் மிகுந்த இவர்களது குரு ஸ்ரீ நாராயண குருசாமி யாவுமாம், வைணவச் சீர்திருத்தப் பெரியார் இராமாநுஜருக்குப் பிறகு இக்காலத்தில் சிறந்து விளங்கினவர் ஸ்ரீ நாராயண குருசாமியேயாகும். இவர் கிறிஸ்துவர்களாக மாறிய ஈழுவர்கள் தீயர்கள் இவர்களை மீண்டும் இந்துக்களாகச் சேர்த்துக் கொண்டது மன்றி, ஈழுவர்கள் என்றும் மதமாறாமலிருக்கும்படிக்கும் தக்க முயற்சி செய்து வந்தார். தீயர்களும் ஈழுவர்களும் பௌத்த மதத்தைச் சார்ந்து கொள்ள விரும்ப அதனையும் இவர் தடுத்து இந்துக்களாகவே இருத்தற்கு இவர் செய்த வேலை மிகவும் பாராட்டத்தக்கதாகும். இதற்கிடையில் சாதி இந்துக்களால் இவர்க்கு நேர்ந்த இடையூறுகளும் பல. இது வரையில் சாதி இந்துக்களல்லாத அறிஞர்கட்கெல்லாம் கோயில்களில் நாயன்மார்களாக, ஆழ்வார்களாக இடங்கொடுக்கப் பெற்றிருந்துவந்ததை சாதி இந்துக்கள் இன்று உணர்வார்களாயின் ஸ்ரீ நாராயண குருசாமிகட்கு திருவிதாங்கூரில் உள்ள எல்லாக் கோயில்களிலும் சிலாஸ்தாபனம் ஏற்பட்டு வழிபாடும் செய்தாகவேண்டும்.

ஆனால், இந்தக் கோயில்களில் காணப்படுவது தான் என்ன? திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் “நான் விவாதிக்க விரும்பவில்லை. நான் இங்கிலாந்து சென்றதனால் ஸ்ரீ பத்மநாபர் கோயிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. இதனால் நான் கெட்டுப்போய் விடவில்லை. இதனால் நான் நலம் பெற்றதாகவே கருதுகிறேன். சண்டாளன் ஒருவன் தன் இடத்தில் வருவதால் தன் தூய்மை குறையும் என்று தெய்வம் பயப்படுகிறது. என்பதாக நீங்கள் கருதுவதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். கடவுள் முன்னிலையில் சாதி வேற்றுமை பாராட்டப்பட வேண்டும் என்று உயர்ந்த இந்து சாஸ்திரங்களில் காணப்படுகின்றதா? நீங்கள் இந்து சாஸ்திரங்களில் கற்றுக்கொண்ட உண்மை இது தானா? இந்நிலை ஒழிதற்கு நாம் அவசியம் முயற்சிக்கவேண்டும். நாம் கண்டு வெட்கும்படியானதல்ல நமது மதம். கடவுளுக்கே குறைநேரிடுமென்னும் இழிந்த தத்துவத்தை உடையதா நமது இந்துமதம்? (ஒருவர்:-கோயில்களில் கடவுள் இல்லை)” என்று பேசினார்.

## சாதி இந்துக்களல்லாதவர்கள்

சாதி இந்துக்களல்லாதவர்களைப் பொறுத்த வரையில் சாதி இந்துக்களின் மனப்பான்மை சிறிதும் மாற்றமடையவில்லை. சாதாரண குடித்தன வசதியும் இவர்கட்கு அளிக்கப்படவேயில்லை. நாகர்கோயில் முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் முனிசிபல் கிணறுகளில் கூட அவர்கள் ஜலங்கொள்ள முடியாது; முனிசிபல் சாலைகளை உபயோகித்தல் கூடாது; முனிசிபல் விளக்குகளின் வெளிச்சத்தை அநுபவிக்கலாகாது. இக்கொடுமைகளைப் பற்றிக் கூறுவதற்கு இச்சொற்பகாலம் போதியதன்று.

திருவிதாங்கூரில் நடைபெறும் சமூகக் கிளர்ச்சியைப் பற்றி திரு. செயின்ட் நிகால்சிங் (புகழ் சிறந்த கட்டுரையாசிரியர்) கூறுவதாவது:—

“புதிய கொள்கைகள் பரவுதல் பெறவும் சமூகத்தில் ஒரு பெருங் கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. புதியக் கொள்கைகளால் பழையன வெல்லாம் கால்வாங்குகின்றன. இச்சமஸ்தானத்தில் இராணுவ வகுப்பைச் சார்ந்த நாயர்கள்கூட சூத்திரர்கள் தாம். பார்ப்பன ஆதிக்கம் அத்தனை வலிமை பெற்றிருந்தது. சூத்திரர்கட்குக் கீழ் உள்ளவர்கள் சமூகத்தினின்றும் ஒதுக்கப்பட்டவர்கள் ஆயினர். ஆனால் இந்த நிலைமை மாறி வருகிறது. ஜாதி வேற்றுமைக்கு எதிர்ப்பு வலிமையடைந்து வருகின்றது. பல விலங்குகள் உடைத்தெறியப்பட்டு விட்டன. பல விலங்குகள் உடைபடாமல் உள்ளன. இவைகள் ‘கீழ்த்தர’ சாதியினரை துன்புறுத்தி வருகின்றன என்பதில் ஐயமில்லை. பயிற்சி மிகவும், தலைவர்கள் தோன்றவும் இப்போராட்டம் கடுமையாகின்றது. இதுவரையில் மகாராணி அவர்களின் உத்தியோகஸ்தர்கள் சமரசமாக சில காரியங்களைச் செய்து வைத்திருக்கின்றனர். நெருக்கடியான காலம் இனிதான் நிகழும், அது காலை உண்மை வீரமும் புத்திநுட்பமும் அவசியமாகும்.

நான் இச்சமஸ்தானத்தின் நிலைமையைப்பற்றி இங்கெடுத்துரைத்து உங்கள் பொறுமைக்கு அதிக வேலை கொடுத்து விட்டேன். இந்த விஷயங்களை யெல்லாம் திருப்திகரமாக முடிவுசெய்யவேண்டியது நமது கடமையாகும்.

இந்த விஷயங்களில் நாம் அதிக சிரமம் படைத்தலாகாது என்று உபதேசிக்கப் படுகின்றது. [illegible] இவ்வுபதேசத்தை அப்படியே ஏற்றல் முடியாத காரியமாகின்றது. இது ஒரு சிறிதளவர் வாயிலாய் பிறக்குமாயின், இதில் உண்மையிருப்பதாக நினைப்போம். ஒரு சாதி இந்து இத்தகைய உபதேசம் கூறுவதற்கு இதில் ஏதோ சூழ்ச்சியோ சுயநலமோ இருப்பதாகத்தான் கருதப்படும்.

ஆனால் சந்தர்ப்பத்தை பொறுத்தே இருக்கின்றது. நாம் பொறுத்து ஆற அமரவும் உழைப்போம். ஆனால், இறுதிவரையில் ஆற அமர வேலை செய்யவேண்டும் என்பதை நாம் அநுசரிக்காமலிருக்கவும் நேரும். இப்பொழுதுள்ள இந்து மதத்தையும் அதன் சாதிக் கொடுமைகளையும் ஏற்று நாம் திருப்தியடையச் சித்தமாய் இருப்போமாயின் நமது சுவாமி விவேகானந்தர் பித்தர்கள் என்று கூறியது பொய்யுரையா என்று ஆலோசிக்க நேரிடும். நான் இதனை புத்தரவர்களின் அறிவின் முதிர்ந்த வாக்கியத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

“வணக்கம் எதற்கு? இருள் ஒளியாமா? மௌனத்தினிடமிருந்து எதையும் வேண்டாதீர்கள்; மௌனம் பேசுமா? உங்கள் துயரமிக்க மனத்தை அழுதழுது துன்புறுத்தாதீர்கள். சகோதர சகோதரிகளே! உதவியற்ற கடவுள்களிடமிருந்து எத்தவித உதவியையும் துதியாலும் பலியாலும் அடைய விரும்பாதீர்கள்; அக்கடவுள்கட்கு இரத்தம் பழம் அப்பம் முதலிய லஞ்சம் வழங்க முயற்சிக்காதீர்கள். உங்கள் விடுதலையை உங்களுக்குள்ளாகவே தேடி அடையுங்கள்.

“நல்லொழுக்கத்தாலும் அறிவாலும் இன்றைய பிச்சைக்காரன் நாளைய அரசனாவான். தகாதவைகளைச் செய்து இன்றைய அரசன் நாளைய வறியனாய் கந்தையோடு நாடலைவான். நீங்கள் இந்திரனிலும் மேன்மையைப் பெறலாம், பேய்களிலும் கீழ்த்தன்மை பெறலாம். உங்கள் துன்பம் உங்களாலேயே வாய்க்கின்றது. உங்களை கட்டுப்படுத்துபவர் இவ்வுலகில் யார்? ஒருவருமில்லை.

சீமாட்டிகளே! சீமான்களே! உங்களை மீண்டும் இம்மகாநாட்டிற்கு வரவேற்கின்றேன்.

## தலைவருரை

ராவ்பகதூர் எம். கே. ரெட்டி பி ஏ. அவர்களின் தலைமைப் பேருரை வருமாறு:—

சீமாட்டிகளே! சீமான்களே!

இங்கு கூடியிருக்கும் அனைவரையும் சந்திப்பதில் எனக்குள்ள மகிழ்ச்சிப்பெருக்கைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் எனக்கு இன்று இவ்வுயர்ந்த மதிப்பை அளித்தமைக்கும் நான் வந்தனமளிக்கின்றேன்.

செங்கற்பட்டில், சென்ற பிப்ரவரி மாதத்தில் முதலாவது மாகாணச் சுயமரியாதை [illegible] இயக்கத்

(இதன் தொடர்ச்சி 11-ல் பார்க்க)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

# குடி அரசு

சென்னை 1929 டிசம்பர் 29உ

## விவாக ரத்து

சமீபத்தில் சென்னையில் நடந்த ஸ்திரீகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வாசகர்கள் அறிந்திருக்கலாம். அவைகளில் முக்கியமாக இரண்டு தீர்மானங்கள் மாத்திரம் அதிகமான விவாதத்திற்குக் காரணமாயிருந்தன; "ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சரிசமானமான ஒழுக்கமுறைகள் ஏற்படுத்த வேண்டும்" என்பது ஒன்று. கலியாணமான பெண்கள் தகுந்த காரணமிருப்பின் தங்களுக்கிஷ்டமானபோது தங்கள் விவாகத்தை ரத்து செய்து கொள்ளலாம்," என்பது இரண்டு. இந்த இரண்டு தீர்மானங்களும் பெரிய படித்த மனிதர்கள் என்பவர்களையும் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுகிறவர்கள் என்பவர்களையும் சரியான பரிட்சை பார்த்துவிட்டது என்றே சொல்வோம். நமது தென் இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் ஒன்று விடாமல் "விவாக ரத்து" தீர்மானத்தைக் கண்டித்துவிட்டன.

இத்தீர்மானம் சம்பந்தமாக பத்திரிகைகளில் நடந்த வாக்கு வாதங்களும், மறுப்புகளும், கண்டனங்களும், அவைகளுக்கு எழுதப்பட்ட பதில்களும் நமது வாசகர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். வயது சென்ற ஸ்திரீகள் என்று சொல்லக் கூடியவர்களில் சிலர் இத்தீர்மானத்தின் உண்மையை உணராமல் இதை எதிர்த்த விஷயம் நமக்கு மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது.

ஸ்திரீகள் மகாநாடு நடைபெற்ற அன்றைய தினமே, இவ்விதமான தீர்மானங்கள் கொண்டு வருவது தனக்கு இஷ்டமில்லையென்று சொல்லி, அக்கிராசனர் ஸ்ரீமதி சீனிவாசய்யங்கார் அவர்கள் தன்னுடைய அக்கிராசனப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்கள். பிறகு வேறு ஒருவருடைய அக்கிராசனத்தில் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு மேற்சொன்ன தீர்மானங்களும் இன்னும் இதர தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. பிறகு இது சம்பந்தமாக பிரபல ஸ்திரீகள் சிலருக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டு பத்திரிகைகள் மூலியமாக இருசாரார்களுடைய அபிப்பிராயங்களையும் வெளியிட்டு வந்தார்கள். இன்னும் அத்தீர்மானங்களின் சம்பந்தமான அபிப்பிராயங்கள் பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டே இருக்கின்றன. ஆதலால்தான் இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி நமது அபிப்பிராயத்தையும் வெளியிட விரும்புகிறோம். மேலும் சென்னை மாகாணத்தின் முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட இதே இரண்டு தீர்மானங்களுக்கு இப்போதிருக்கும் எதிர்ப்புகளைவிட பலமான எதிர்ப்புகள் தோன்றியதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்தசந்தர்ப்பத்தில் இதைவிட "வேகமானதும்" "புரட்சியானதும்" என்று பிறரால் அநாவசியமாக தூற்றப்பட்ட சில இதர தீர்மானங்களைப்பற்றி நாம எழுத வேண்டியதாயிருந்ததால், ஸ்திரீகளைப்பற்றி மேற்கண்ட இரண்டு தீர்மானங்களைப்பற்றி அதிகமாய் விவரித்து எழுத அவகாசமில்லாது போயிற்று. ஆகையால் இந்த சந்தர்ப்பத்திலாவது இது சம்பந்தமாக நமது கருத்தை விளக்கிவிட வேண்டுமென்று எண்ணுகிறோம்.

முதலாவதாக, ஆண், பெண் இருபாலாருக்கும் சமமான ஒழுக்க முறைகள் இருக்கவேண்டுமென்பது. இது விஷயமாக அபிப்பிராய பேதமே இருக்காது என்று எதிர்பார்த்தோம். ஆனால், இதில்கூட படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுங் கூட மாறுபாடான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தவுடன் நமக்கு பெரிய ஆச்சரியமாகவே இருந்தது. உதாரணமாக, பார்ப்பனரல்லாதாருக்காக உழைக்கும் "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் ஆண், பெண்ணுக்கு சமமான சட்டம் இருக்க வேண்டுமென்று சென்னை ஸ்திரீகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனோம். ஏழை மக்களுக்காகவும், நியாயத்திற்காகவும், சகோதரத் துவத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும் உழைப்பதாகச் சொல்லும் "ஜஸ்டிஸ்" பத்திரிகையானது சாஸ்திரங்களை உதாரணமாகக் காட்டி இத்தீர்மானத்தைக் கண்டித்ததானது நாம் என்றும் எதிர்பாராததும், ஏமாற்றமுமான விஷயமேயாகும். பகுத்தறிவுக்கு ஏற்றதான காரணங்களைச் சொல்லாமல் "ஜஸ்டிஸ்" பத்திரிகையானது, "பொதுவாகவே பெண்கள் இயக்கம் சரிவர நடத்தப்படுவதில்லை" என்ற பெரும் குற்றத்தைச் சுமத்துகிறது. இந்த அபிப்பிராயம் உண்மையா? இல்லையா என்பதைப்பற்றி நமக்கு அதிகக் கவலையில்லை. ஆனால், நமக்கு வேண்டியதெல்லாம் இது மாதிரி விஷயங்களில் பெண்பாலருடைய முடிவான அபிப்பிராயம் என்னவென்பதே. ஏனெனில், பெண்கள் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி ஆண்கள் முடிவு செய்வதைவிட பெண்களது அபிப்பிராயத்தையே பின்பற்றுவதுதான் முறையான வழியாகும். இன்று நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் பெண்களின் நிலைமை சற்று தாழ்மையாகவே இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதிகள் சட்ட திட்டங்களெல்லாம் பெண் மக்கள் படித்திராத காலத்தில் ஆண் மக்களால் ஏற்படுத்தப்பட்டதால்தான். பார்ப்பனரல்லாதார் படிக்காத காலத்தில் எப்படி நம்மைப் பற்றித் தூஷித்து நம்மை "அடிமைகள்" என்று புராணம் முதலானவைகளை எழுதி வைத்தார்களோ அதே மாதிரியாகத்தான் ஆண் மக்களும் தங்களுக்கு ஏற்றவாறு பாரபட்சமான சட்ட திட்டங்களை ஏற்படுத்தினார்கள். உதாரணமாக புருஷன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டுமென்ற கட்டாயத்திற்குப் பெண்கள் சம்மதித்திருப்பார்களா என்று யோசித்துப் பாருங்கள், அப்படி சம்மதித்திருந்தாலும் அதே மாதிரி மனைவி இறந்த புருஷனையும் உடன் கட்டை ஏற வேண்டுமென்று வது கேட்டிருக்க மாட்டார்களா என்பதும் சற்று யோசித்துப் பார்க்கவேண்டிய விஷயமாகும்.

ஆகவே, இம்மாதிரியாக பல வழிகளில் பெண் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு ஆண்களுடைய சுயநலமே காரணம் என்பது "ஜஸ்டிஸ்" போன்ற பத்திரிகைகளுக்கு இன்னும் தெரியாமலா இருக்கிறது என்பது நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை ஒழுக்கம் முதலிய விஷயங்களில் சம சட்டங்கள் இருந்தாலே அவசியம் என்பதை ஜஸ்டிஸ் போன்ற பத்திரிகைகள் மறைத்தாலும் அல்லது எதிர்த்தாலும் நமது நாட்டுப் பெண்கள் ஆயிரக்கணக்காய்ப் படிக்க ஆரம்பித்துவிட்ட இக்காலத்தில் ஆண் மக்களது சுயநல அபிப்பிராயங்களுக்கு எவ்வித செல்வாக்கும் மதிப்பும் இருக்காது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இதுடிப்படையான முக்கிய கொள்கையிலேயே நமது சகோதரப் பத்திரிகையின் அபிப்பிராயத்துக்கும் மாறுபடவேண்டியிருக்குமென்று எதிர்பார்க்கவே இல்லை.

இரண்டாவதாக உள்ள "விவாக ரத்து" விஷயந்தான் சற்று கூர்ந்து கவனிக்கவேண்டிய விஷயமாகும். இது சம்பந்த செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டிலும் சென்னை ஸ்திரீகள் மகாநாட்டிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது யோசனையற்றவர்களால் செய்யப்பட்டதல்லவென்பது வாசகர்களுக்குத் தெரியும். ஆண்களே நூற்றுக்கு 95 க்குமேல் கூடியிருந்த செங்கற்பட்டு மகாநாடும், பெண்மக்களே நூற்றுக்கு நூறு கூடியிருந்த சென்னை ஸ்திரீகள் மகாநாடும் ஒரே தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனவென்றால் ஏதாவது தவறு இருப்பதற்கு ஆதாரமிருக்கிறதா என்று கேட்கிறோம்.

இதைப்பற்றி ஆராய்வதற்கு முன்பு இது சம்பந்தமாக [illegible] தப்பபிப்பிராயம் கொண்டுள்ளார்களென்பதை விளக்கவேண்டியது அவசியமாகிறது. "விவாக ரத்து" சட்டமானவுடனே எல்லாப் பெண்களும் தங்கள் கணவர்களை விட்டு ஓடிவிடுவார்கள் என்றும், "கற்பு நிலை" போய் கெட்டுப் போகுமென்பவர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்புக்கும், அதற்கும் ஒரு சட்டம்செய்தால்கூட எல்லோரும் அதே வேலையிலிருப்பார்களென்பது இல்லை; மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில்தான் ஜனங்கள் அதை உபயோகிப்பார்கள். ஏனெனில், அதனால் ஏற்படக் கூடிய கஷ்டங்களுக்குத் தாங்களே உட்படவேண்டியவர்கள் என்பது அறிவுள்ள மக்களுக்கு நாளடைவில் விளங்கிவிடும். ஆகவே, "விவாக ரத்து" அனுமதிக்கப்படுமானால் எல்லோரும் ஓடிப்போய் விடுவார்களென்று நினைத்துக்கொண்டிருப்பது, அ[illegible] சுயநலத்தினால்

ஏற்படக்கூடிய பயம் என்றுதான் சொல்லுவோம்

"விவாக ரத்து" சட்டமானது பெண்கள் சமூகத்திற்கு ஒரு இன்றியமையாத பாதுகாப்புக் கருவி என்பதே நமது முடிவான அபிப்பிராயம். புருஷனுக்கும் மனைவிக்கும் பரஸ்பர அன்பும் சமமான வாழ்க்கையும் ஏற்படவேண்டுமானால் இருவருக்கும் தனித்தனியாக உரிமையிருந்தால்தான் முடியும். இப்போதிருக்கும் "இந்திய" சமூகத்திலுள்ள மணவாழ்க்கையானது பல வழிகளிலும் பெண்மக்களுக்குப் பாதகமானமுறையிலேயே நடைபெற்று வருகிறது. ஒரு புருஷன் தனக்குத் தேவையில்லாதபோது தனது மனைவியை நீத்திருக்கும் நமது சட்டமானது, பெண்களுக்கு அதே உரிமையைக்கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இந்த உரிமை மனிதனுக்கு இருப்பதால், எல்லாப் புருஷர்களும் இதே வேலையாகவா இருக்கிறார்கள் என்றுதான் கேட்கிறோம். ஆகவே, இதே உரிமையைப் பெண்மக்களுக்கும் அளிக்கவேண்டியது நியாயமும் கிரமமும் ஆகும் என்பதை இன்னும் ஏன் ஆண்மக்களில் சிலர் அறியவில்லையென்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இந்த விவாக ரத்துத் தீர்மானத்தை வைதிகப் பத்திரிகைகள் தான் கண்டித்தன வென்றால், நமது "ஜனநாயக"த் தினசரியான "ஜஸ்டிஸ்" பத்திரிகையும் கண்டித்ததுதான் நமக்கு விளங்கவில்லை. எது எப்படியாயினும், இந்தத் தீர்மானத்தின் அவசியத்தை நமது சுயமரியாதை இயக்கத்து அன்பர்கள் நன்கு அறிவார்களாகையால், இம்மாதிரி சமத்துவமான நோக்கமுடைய விஷயங்களில் எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், அதற்காக நாமோ நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களோ எவ்வளவு கடமையினின்றும் பின்வாங்கமாட்டோம் என்பதை மாத்திரம் உறுதி கூறுகிறோம். கடைசியாக, நமது "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்கு ஒன்று கூற விரும்புகிறோம். பொதுமக்களின் உணர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட அப்பத்திரிகையானது இனியாகிலும் மக்களது அபிப்பிராயத்தை ஒட்டி சீர்திருத்தத்தில் முன்னணியில் நின்று, தனது பழைய குருட்டு நம்பிக்கைகள் ஏதேனும் மிஞ்சி இருக்குமானால் அவைகளை உடனே ஒழித்து சமூகத்தொண்டையே பிரதானமாகக் கொண்டு வேலை செய்யும் என்று எதிர் பார்க்கிறோம். மற்றொரு சந்தர்ப்பத்தில் இது சம்பந்தமாக இன்னும் விவரமாக எழுதுவோம். (சா. கு)

## திரு. வேணுகோபால் நாயுடுவின் மரணம்

பட்டுக்கோட்டையில் திரு. வேணுகோபால் நாயுடு அவர்கள் இறந்துவிட்டார் என்ற செய்தியைக்கேட்டதும் எமது மனம் அடைந்த துடிப்பைச் சொல்லிமுடியாது. சில நிமிஷங்கள் வரை திக்பிரமையில்லாமல் மனது தத்தளித்துக்கொண்டிருந்தது. இப்போதும் இச்சம்பவத்தை நினைக்குந்தோறும் மனம் திடுக்கிடுகிறது. திரு. வேணுகோபால் நாயுடு அவர்கள், பார்ப்பனீயம் நிறைந்த பட்டுக்கோட்டையில், நமது மக்களுக்கு, அதுவும் முக்கியமாக இளைஞர்களுக்கு எவ்வளவு ஆதரவாகவும் உதவியாகவும் இருந்தார்கள் என்பது அவ்விடத்தில் இன்று இளைஞர்கள் படும் துயரத்தை நேரில் பார்ப்பவர்களுக்கு நன்கு தெரியும். மாணவர்களுக்கு நற்புத்தி புகட்டக்கூடிய பிதாவும், ஏழைமக்களுக்கு வேண்டுவன அளித்து அவரது துயர்நீக்கிய அண்ணனும், பார்ப்பனீயமும் புரோகிதப்புரட்டும் கண்டு அஞ்சும்படியான சுயமரியாதை வீரரும், வக்கீல் தொழிலில் ஒரு பிரபலஸ்தரும், பொதுவாக, பார்ப்பனரல்லாதார்களுக்கே தஞ்சை ஜில்லாவிற்கு ஒரு தலைவருமாக விளங்கிய திரு. வேணுகோபால் அவர்களை இழந்தது நமக்கு ஒரு பெரிய கஷ்டமென்றே சொல்வோம். அவர்களது முற்போக்கான கொள்கைகளும், தன்னலமற்ற சமூகத்தொண்டும், தைரியமாய் தனது அபிப்பிராயத்தை யாரிடத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் வெளியிடக்கூடிய தைரியமும் நமக்கும் நமது இயக்கத்திற்கும் எவ்வளவு பக்க பலமாயிருந்தது என்பதை நினைக்குந்தோறும் அற்றெனுத் துயரம் மேலிடுகிறது. இனி பொதுவாக தஞ்சை ஜில்லா வாசிகளும் குறிப்பாக பட்டுக்கோட்டை வாசிகளும் செய்யவேண்டியது யாதெனில், காலஞ்சென்ற நமது அன்பர் திரு. வேணுகோபால் அவர்களைப் பின் சொல்லுக்கு அடங்காத அநேக சடங்குகளும் தற்சமயம் நடந்துவருகிறதை திராவிடன், வாரம் ஒருமுறை குடி அரசு பத்திரிகைகளிலும் பார்த்துவருகிறதை தவிர நமது நண்பர்கள் சொல்லுவதைக்கேட்டும், நேரில் நடந்திருந்ததைப் பார்த்திருந்தும், நடத்திவைத்திருந்தும், சில

---

பற்றி, அவர்கள் செய்துவந்த வேலையை நாமும் செய்வதோடு, அவர்களது ஊக்கமும் உற்சாகமும் என்றும் நமக்கும் இருக்குமாறு நமது சமூகத்தொண்டை செய்வதுதான். திரு. வேணுகோபால் அவர்களின் குடும்பத்தாருக்கும், இதர பார்ப்பனரல்லாத சமூகத்தார்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## அறிவிப்பு

நமது "குடி அரசு" ஆபீஸ் ஈரோட்டிற்கு மாற்றப்படுகிறபடியால் அடுத்த வாரம் "குடி அரசு" நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை வாசகர்களுக்கு வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம். "குடி அரசின்" 35-வது மலர் ஈரோட்டினின்றே வெளிவருமாகையால் இனி நமது ஆபீஸ் சம்பந்தமான எல்லாக் கடிதங்களும் "குடி அரசு" ஈரோடு என்ற விலாசத்திற்கே எழுதும்படி கோருகிறோம்.

மானேஜர்.

## மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிந்தபாடில்லை

### பெரியார்கள் கூற்று என்னே?

(கே. என். பொன்னம்பலம் எழுதுகிறார்.)

இவ்விருபதாம் நூற்றாண்டில் கூட மதியீனமாய்இருக்கிறீர்களே! தற்சமயமோ சுயமரியாதையின் பெருமையை என்னென்று உரைப்பேன் எங்கு பார்த்தாலும் (சுயமரியாதை) நமது இயக்கத்தின் பிரசாரம் மூடப்பழக்கவழக்கம், பார்ப்பனீயம் இவைகள் அனைத்தும் வேரோடு அறுந்து நல்லிய திருமணங்களும், கலப்பு மணங்களும், விதவாவிவாகங்களும், வீடுபுகுதலும், திதிகளும், கோயில் குப்பாஅபிஷேகங்களும், இன்னும் ரென்ன, நூற்றுக்கு எண்பதுபேருக்கு குறையாமல் நாங்கள் பழைய வழக்கப்படி நடத்துகிறோமென்று 'சொல்லுபவர்களுக்கு" பதில் உரைத்துவிடுகிறார்கள். என்னையா! பழைய காலத்தில் அதாவது நூறு, இருநூறு, முன்னூறு வருஷங்களுக்கு முன் பார்ப்பனரைக்கொண்டு தான் சடங்குகளை செய்து வந்தார்களோ! குழந்தை ஜனனமுதல் பதினோராம் நாள் வீடுபுகுவது (புண்ணியாவசனம் என்று சமஸ்கிருதத்தில்) முதல் கொண்டு இறந்தும்கூட ஒவ்வொரு சடங்குகளுக்கும் கல்வி கற்றவர்களும், கல்வி கற்காதவர்களும், விவேகிகளும், பார்ப்பனரைக் கொண்டு காரியத்தை பெரியவர்களே செய்கிறார்கள். என்னென்று சொல்லுவது? நமது சுயமரியாதை இயக்கத்தைத் தழுவி மற்ற நண்பர்களுக்கு போதித்து சில சடங்குகளில் அவர்களே முன்னுக்கு நின்று நடத்தியும் அவரவர்கள் வீடுகளில் இதற்கு எதிரிடையாய் மேல் சென்ன சடங்குகளுக்கு நல்ல சுயமான பார்ப்பனரைக் கொண்டு நடத்துகிறார்கள், என்ன சொல்லுவது? பெரியார்கள் வார்த்தைகள் எப்படி வேண்டுமானாலும் செல்லும்போல் தெரிகிறது. உதாரணமாக கொங்கபாளையத்தில் விபவ ஆண்டு ஆவணித்திங்கள் பத்தாம் நாள் நடந்த திருமணத்திற்கும், மேற்படியூரில் விபவ ஆண்டு கார்த்திகைத்திங்கள் பததாம்நாள் திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, ஜே. எஸ். கண்ணப்பர் இன்னும் சுயமரியாதை வீரர்கள் முன்னிலையில் நடந்த திருமணத்திலும் பல பெரியார்கள் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப்படி வித்தியாசமில்லாமல் முன்னுக்கு அவர்களே நின்று நடத்தி மணமகனுக்கும், மணமகளுக்கும் ஆசீர்வாதம் செய்திருக்க, அவரவர்கள் வீட்டில் செய்வது என்ன அறிவுடமை? என்னையொத்த சிறுவர்கள் சொன்னாலோ, அவர் பேச்சை, இவர் பேச்சை கேட்டு சொல்லுகிறாயோ என்று கேலி செய்துவிடுகிறார்கள். சிறியோன் சொல்லுவது நியாயமா, தப்பாவென்று யோசனை செய்யாமல் அலட்சியமாக விட்டுவிடுகிறார்கள். இப்பெரியார்களே இப்படி செய்தால் என்னை யொத்தவர்கள் மற்ற நண்பர்களுக்கு சுயமரியாதை இயக்கத்தின்படி பிரசங்கம் செய்து மேற்படி இயக்கத்தில் தழுவ செய்வது எப்படி? அதுவுமல்லாமல் என் பெரியார்கள் சரியாக நடக்கிறார்களா? எனக்கு புத்தி சொல்ல வந்து விட்டாயா

என்று உடனே கன்னத்தின் பேரில் அறைந்தாற்போல் பதில் சொல்லி விடுகிறார்கள். நாம் தலை குனிந்து வரவேண்டியதாய் இருக்கிறது. என்னென்று உரைப்பது? வாசகர்களே அறிந்துகொள்ளுங்கள். பணம் இருந்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம்போல் தெரிகிறது. சடங்குகளுக்கு பார்ப்பனனைக்கொண்டு நடத்தும்படி எந்த சாஸ்திரத்தில் சொல்லுகிறது. நாம் கனவான்களாய் இருந்ததினாலேயா தலைகீழாக செய்யலாமோ, நம்மையொத்த கனவான்கள் வீடுகளில் பார்ப்பனனைக் கொண்டுதான் சடங்குகள் செய்கிறார்களோ, அல்லது நமது ஏழைச் சகோதரர்கள் வீடுகளிலும் பார்ப்பனனைக்கொண்டுதான் ஒவ்வொரு சடங்குகளும்செய்கிறார்களோ. பார்ப்பனனைக்கொண்டு செய்த கனவான்கள் வீடுகளிலும் கூட அறவே மூடப் பழக்க வழக்கம், பார்ப்பனீயம் முதலான ஆபாச சடங்குகளை ஒழித்து சுயமரியாதை இயக்கத்தின்படி சடங்குகளைச் செய்துகொண்டு வருவதை நேரில் பார்த்திருந்தும், பத்திரிகைகளிலும். பார்த்திருந்தும், அவரவர்கள் வீடுகளில் பார்ப்பனனைக்கொண்டு செய்தால் தாங்களும் முழு பிராமணன் ஆய்விடலாமென்றோ? அல்லது பார்ப்பனர்களை நீக்கி செய்தவர்கள் முட்டாள்களா? பார்ப்பனர்களைக்கொண்டு செய்தவர்கள் முட்டாள்களா என்றும் புலப்படவில்லை. இப்படியிருக்க குளித்தும் குளிக்காமலும், இரவில் எந்த இடத்தில் விபசாரம் செய்தோ செய்யாமலோ, நாமம், விபூதி, சந்தனம் முதலானதுகளுடன் வரிகழுதைக்கு எப்படி பட்டை இருக்குமோ அம்மாதிரி பட்டைபோட்டுக்கொண்டும், அன்று தான் பூணூலை கண்ணில் பார்த்தாரோ, பாராமலோ எடுத்து மஞ்சள் பூசி தோளில் போட்டுக்கொண்டு வந்து எல்லோருக்கும்பெரியவராகிய ஆசனத்தில் அமர்ந்துகொண்டு புத்தி மயங்கி கடன் வாங்கியோ வாங்காமலோ, அன்று சம்பாதித்து சேகரம் செய்து வைத்திருக்கும் சாமான்களையெல்லாம் கொண்டுவரச் சொல்லி, அவ்விடத்தில் இருக்கும் சகோதர, சகோதரிகளை ஏமாற்றிக் கொண்டு, ஏதோ வந்ததற்கு அர்த்தமில்லாத வார்த்தைகளைச் சொல்லி பொருள் கொண்டு போகிறவர்தான் யோக்கியன்; அந்தோ பசியால் வருந்திக் கொண்டுவந்து வாய்திறந்துகெஞ்சிக் கேட்பவருக்கு அயோக்கியப்பட்டமும், சாப்பாடு போடமாட்டோம்எங்கள் வீட்டில் இதி என்று அடித்து துரத்திவிடுகிறார்கள். என்னையா! பரிதாபம், பாபம், ஐயோ? அவருடைய ஜென்மம் என்ன? அவரும் ஒரு மனிதர் தானே. வீட்டில் இருக்கும் நாய் கூட அன்று மன்றாய சாப்பிட்டு விடுகிறது. நாயைவிட அவர் கேவலமாய் போய்விட்டாரா? இதிஎன்றால் அவருக்கு சாப்பாடுபோடக்கூடாதா? ஏமாற்றி பொருள் கொண்டு போகிறவனுக்கு மாத்திரம் வேண்டியமட்டில் பொருள் கொடுக்குமுதியவனாய் இருந்தாலும்சரி பால்குடிக்கும்குழந்தையாய் இருந்தாலும்சரி, கைகூப்பி சாஷ்டாங்கநமஸ்காரம்செய்து அவனுடையபாதத்தில்விழுந்து அவர்ஆசீர்வாதம் செய்தாலும்செய்யாவிட்டாலும் சந்தோஷமாய் போய் வாருங்கள் என்று அனுப்பி கொடுக்கிறார்கள். வீட்டில் ஆனசாப்பாட்டை ஒருவனுக்கு போடலாகாதாம். என்னென்று சொல்லுவது? அறிவுக்கு தன் வீட்டில்பார்ப்பனனைக்கொண்டு நடத்தும் சடங்குகளுக்கு வருஷத்தில் எவ்வளவு செலவு ஆகுமோ அவ்வளவு பொருளையும் நமதுபாதாரவிந்தத்தில் கிடக்கும் ஏழைசகோதரர் சகோதரிகளுக்கு உதவி புரிந்துஅவர்களுடைய பிள்ளைகளுக்கு கல்வி கற்கவும், நம்மைப்போல் அவர்களையும் கீழ் விடாமல் மேலுக்குக் கொண்டு வந்தால் எவ்வளவு புண்ணியம். அந்த பார்ப்பனனுக்குக்கொடுத்தும் வீட்டை விட்டுதான் தினமும் திட்டி கொண்டுதான் போவானே ஒழிய (சிலர் கொடுத்தும் திட்டிக்கொண்டு போவதையும் நேரில் பார்த்திருக்கலாம்) திருப்தியாய் போகமாட்டான். மேல் சொன்ன ஏழைச் சகோதரசகோதரிகளில் ஒருவருக்கு ஏந்தஉதவிபுரிந்தால், திருப்தியாய், மகராசனாய் இருப்பாய் என்று வாழ்த்துக்கூறி சந்தோஷமாய் சென்று, அவர் எந்தஇடத்திற்குச் சென்றாலும் திருப்திகரமாய் இவ்வுதவி புரிந்தார் என்று பெயரைச் சொல்லிக்கொண்டே இருப்பார். (இதையும் நேரில் பார்த்திருக்கலாம்) இப்படியிருக்க இன்னும் நாம் இச்சுயமரியாதைக் கொள்கைப்படி ஆபாசமான சடங்குகளை நீக்கி பார்ப்பனீயத்தையும் அறவே ஒழித்து ஏழ்மை சகோதர சகோதரிகளுக்கு உதவிபுரிந்து அவர்களையும் நம காலடியில் இல்லாமல்மேலுக்குக் கொண்டுவரும்வழியை த்தேட வேண்டுமாய் பெரியோர்களை தாழ்மையுடன் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். சிற்க; நான் என்னுடைய பந்துக்களான பெரியப்பா, இன்னும் மற்ற இடங்களிலும் நடந்த சடங்குகளுக்கு பார்ப்பனனைக்கொண்டு நடத்தினதை நேரில்பார்த்திருந்ததால் மனம் நொந்து மற்றவர்களுக்கு என்னபதில் சொல்லுவதென்று நினைத்து போயும், என்னுடைய நண்பர்களும், காரியத்தை நடத்தின பார்ப்பனர்களும் அதே இடத்தில் என்னை கேட்டதின் பேரில் அதிக வருத்தம் உண்டாகிபதில் சொல்ல வாய் எழாமல் திகைத்துப்போனேன். என்னென்று உரைப்பது? ஆகையால் பெரியோர்களாகிய நீங்கள் இனிமேலாவது எந்த சடங்குகளுக்கும் பார்ப்பனர்களை அறவே ஒழித்து நமது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப்படி அவரவர்கள் வீடுகளில் நடத்தி உங்களைப்போல் இருப்பவர்களுக்கும், சிறியோர்களாகிய எங்களுக்கும்நமது இயக்கத்தை உபதேசம் செய்து படுகுழியில் இருக்கும்எனது அருமைச் சகோதர சகோதரிகளுக்கும் உதவி புரிந்து நம் அனைவரைப் போல் அவர்களுக்கும் சுதந்திரம் கொடுத்து உதவுமாறு தாழ்மையுடன் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.



செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவரும், அகில திருவிதாங்கூர் சமுதாய சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்தவருமான ராவ் பகதூர் எம். கிருஷ்ணசாமி அவர்கள்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பற்றி மிருந்த விவாதம் ஏற்பட்டு வந்தது. இவ்வியக்கத்தின் தத்துவம் என்ன, அதன் லட்சியம் என்ன என்பதுபற்றி நான் ஏற்கனவே ஒருமுறை விளக்கிக் கூறியுள்ளபடியால், மீண்டும் இதன் தொடர்பாய்நான் விவரிக்க விரும்பவில்லை. செங்கற்பட்டு மகாநாட்டு நிகழ்ச்சின்போது கூடியிருந்த பெருந்திரளான மக்கள், இவ்வியக்கத்தின் அடிப்படையான தத்துவத்தையும் நடைமுறைகளையும்கண்களை மூடிக்கொண்டேஏகமனதாய் ஆமோதித்து விடவில்லை. அரசியல், மதவியல், சமூக இயல் முதலியவைகளில் உள்ளபலவாறான கருத்துக்களும் அதுகாலை எடுத்தியம்பப் பெற்றன. மதத்தில்அபரிமிதமான பற்றுக் கொண்டவர்களும், சீர்திருத்தத்தில் அதிதீவிரம் படைத்து தமது கொள்கையில் சிறிதும் விட்டுக்கொடுக்க மனமில்லாதவர்களும் அக்குழுமியிருந்து ஒருவர்க்கொருவர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துரைத்தனர். மகாநாட்டில் நிலவிய மனோ எழுச்சியையும் ஆர்வத்தையும் உங்களில்அங்குவிஜயம் செய்திருந்தார்கள் செவ்வையாய் உணர்ந்திருப்பார்கள். ஜனங்களின் ஆர்வமும் ஏகமனதுமேயே ஒரு முடிவிற்குவர இடந்தந்தது; இதுவேஇவ்வியக்கத்து விரோதிகள் மனத்தில் திகிலை விளைத்து விட்டது. மகாநாட்டு நிகழ்ச்சியின் பின்னர் நிகழ்ந்த விவாதங்கள்சொந்தப்பொருமையாலும்சகிப்புத்தன்மையில்லாமையாலும்விளைந்தனவென்று நான் கூறுவதற்கில்லை. ஜனங்கள் ஒருமிக்க விழிப்படைந்துவிட்ட உண்மையினையே இவ்வியக்கம் மெய்ப்பிக்கின்றது. திருவாளர் ஈ. வெ. இராமசாமி அவர்களும் அவர் சார்பினரும் இவ்விழிப்புணர்ச்சியை அப்படியே பிரித்தெடுத்துக் காண்பிக்கின்றனரே அன்றி, ஒருபுதியகொள்கையைக் கண்டுபிடித்து அதற்குப் பிரசாரம் புரிபவர்களல்ல அபிமான மத்தசிலர் இப்புதிய உணர்ச்சியின் உண்மைத் தோற்றத்தை அறிந்து கொள்ள இயலாதவர்களாயிருப்பதைப்பற்றி நமக்குக்கவலை இல்லை. எப்பொழுதும் சூழ்ச்சியே குடிகொண்டசில அரசியல் இந்திரஜாலக்காரர்கள் இதைக் கொண்டு விஷமத்தை விளைத்து அதிலிருந்து இழிதகையான ஒருவகை ஆதாயத்தை அடைவதைப்பற்றியும்நமக்குக் கவலையில்லை. எந்த விஷயத்திலும் குறும்புத்தனம்செய்வது என்பது சிலரின தொழிலாய் இருக்கின்றது. இதுவே பார்ப்பனியஎண்ணம் படைத்த சமூக—மத—அரசியல் கழைக்கூத்தாடிகளின் தொழிலாம். இந்துமத தர்ம பரிபாலனம்பற்றி சென்னை சட்டசபையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்படுமாயின் உடனே இத்தகையார் தங்கள் மதம் பாழ்த்தது என்று கூக்குரலிடத் துவங்குவர். இந்தியாசட்டசபையில் சிசுமண நிவாரண சட்டம் ஒன்று நிறைவேற்றப்பெறுமாயின், உடனே சமூகமே (இவர் சமூகம் தம் பெண்டு பிள்ளைகளே) பாழ்த்தது என்றுதொண்டைவறள ஓலமிடுவர் தனக்குஎவ்வளவுமதிப்புவேண்டுமோ அவ்வளவுமதிப்புதானும் பிறர்க்குக் கொடுத்தாகவேண்டுமென்று ஆழ்ந்திலைக்கப்பெற்ற ஒருசமூகம் உணர்ந்துகொண்டதாயின் உடனே இவர்கள் கடவுள் பாழ்த்தது என்று தமது அறிவீனத்தை விளக்கிக் காட்டிக் கொண்டு விடுவார்கள். இவ்வளவு எளிதில் இத்துணை அற்பமான ஒரு விஷயத்தில் கடவுளுக்கு ஆபத்து நேரிடுமாயின், அக்கடவுளுக்குக்கோயில் எதற்கு? அதற்கு வழிபாடும் எதற்கு? கடவுள் உண்டா இல்லையா என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லையென்று நான் என் சொந்தப் பொறுப்பில் கூறுகின்றேன். எனக்கு ஒரு கடவுள்மீதுதான் நம்பிக்கை. அது அன்பெனப்படும். எனக்கு ஒரு கோயில்மீது தான் நம்பிக்கை; அதுமனிதன் எனப்படும்—சிவிதக் கோயில். கடவுளை பொய் என்கின்றார்கள், கோயில்களை இடிக்கவேண்டும் என்கின்றார்கள்என்பதாகப் பிதற்றுவதெல்லாம்வெறும்பிதற்றல்களே.

ஒவ்வொருமனிதனும் தன் கருத்திற்கேற்ற அபிப்பிராயத்தைக்கொள்ளுதற்குஉரிமை உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன்.

மதத்தில் ஒருவனுக்குப் பற்றுதல்உளதாயின் அதனை அவன் தன் ஜீவ தாரமாகக் கருதி இறுகப் பிடித்துக்கொள்ளட்டும். ஆனால்இந்த நம்பிக்கையினை எல்லோரும் கொள்ள வேண்டுமென்று அவன் பிறரை வற்புறுத்தித்தான் புகுதாதிருக்கட்டும். பிறப்பினால் தனக்கு ஏதோ ஒரு மதம் ஏற்பட, அதை அவன் வெகு பெருமையாக மதித்துப் பேசுவானாயின் அவனுக்கு நான் மிகவும் இரங்குகின்றேன். கடவுள் ஞானம் என்னும் காடு அடர்ந்தது; இருண்டது, பல்குழிகளை உடையது. உண்மையில்மெய்ஞ்ஞானம் விரும்பிச் செய்த பெரும் பான்மையேரின் முயற்சியெல்லாம் பலனற்றுப்போய் விட்டது. பலர் கரி பிடித்தக்குருடர் கதையில் கூறியதுபோல் தாங்கள் கண்ட ஒரு பாகத்தையே பூரண ஞானமென்று மனப்பால் குடித்து மகிழ்ச்சி கொண்டிருக்கின்றனர். உண்மை முயற்சியின் முடிவு எது நடக்கவேண்டுமோ அது நடைபெறுதிரும் என்பதில் நின்றுவிடுகின்றது.

அறியாமையாலும் மூடநம்பிக்கையாலும் அனுசரிக்கப் பெற்றுவந்த பண்டைய வழக்கங்களைக் கடந்தறிக்கும் கல்வியறிவுடைய இளைஞரிடத்திலும்கற்றறிந்த மூதியவர்களிடத்திலும் இப்பொழுது ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். பழக்கவழக்கங்கள் தம் பகுத்தறிவுடன் முற்றிலும் முரண்படுவதை அவர்கள் காண்கின்றார்கள். மனுதர்ம சாத்திரங்களைப் போன்ற சாத்திரங்கள் எவ்வாறு கடவுள்நெறியாக இருத்தல்கூடுமென்று சந்தேகித்து இவைகளின்உண்மையை ஏற்க மறுக்கின்றார்கள். நாளுக்கு நாள் வலுத்துவரும் இக்கிளர்ச்சி தான் சுயமரியாதை இயக்கத்தின் பிறப்பிடமாகும். அளவுகடந்த அதிருப்தி ஏற்பட்டவுடன் அந்தவிஷயத்தையும் தம் பகுத்தறிவைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்து பகுத்தறிவிற்கு உடன்பட்ட விஷயங்களையே அங்கீகாரம் புரிவது என்று முடிவு செய்துவிட்டமை இயற்கையே. இந்த ஆராய்ச்சியில்தான் நமது சமூகத் தீமைகள் அகப்பட்டன. தனக்குத் தானே கர்த்தா என்று கருதி அதற்கேற்றபடி நடந்துகொண்ட காலம் ஒன்றிருந்திருக்கலாம். இதன் பின்னர் தான் சமூகவாழ்க்கையின் உயர்வை உணர்ந்திருக்கக்கூடும். இச்சமூக உணர்ச்சி மனிதர்கட்குள் ஏற்பட்ட நெடுங்காலத்துக்குப் பிறகு தான் மதப்புரட்டுகளும் அரசியல் எண்ணங்களும் உதித்திருக்கவேண்டும். மனிதனுக்கு இயற்கையாகவே ஒரு அச்சம் உள்ளது இவ்வச்சமானது அவனவன் இயற்கை உண்மையின் அறிவின் வேற்றுமைப்படி குறைந்தோ நிறைந்தோ விளங்குகின்றது. எனவே, இவ்வச்சத்தை மனித சமூகத்தினின்றும் நீக்க மதம் என்னும் ஒன்று தலையெடுத்து, பல மார்க்கங்களை விளக்கிக்கூறத் துவங்கியது. உண்மை ஞானம் அச்சத்தை தகர்க்கும் அருமருந்தாகும். இந்த உண்மை ஞானத்தை அடைந்தவர்கள், அடையாதவர்களை ஆழ்த்திவைத்து அடிமைகொள்ளும் அவா எண்ணத்தால் தாம் அடைந்த உண்மை ஞானத்தை மறைக்கலாயினர். இத்துடனில்லாமல், பிறரை நீடித்து அடிமைப்படுத்தும் கருத்தோடு அவர்களை அஞ்ஞானத்தில் என்றென்றைக்கும் ஆழ்த்திவைக்கப் பலவித சூழ்ச்சிகளையும் இஞ்ஞானத்தைக் கொண்டு கற்பிக்கத்துவங்கினர் என்றும், தாங்கள் அறிந்த அரைகுறை ஞானத்திற்கு முரணாக எது தோன்றியபோதிலும் அது மதத்துரோகமும் கடவுள் தூஷணையும் நாத்திகமும் ஆயிற்று. பகுத்தறிவு முதிர்ந்து அது வளர்ச்சி பெற்றுப் பரவிய நாகரீக மடைந்த எல்லாத் தேசங்களுமே இதற்குச் சான்றாய் நிற்கின்றன. இதற்கேற்பவே பண்டைய மக்கிப்போன ஞானத்தின் தற்காலம் பொக்கிஷதாரர்களாய் இருப்பவர்கள்; இந்த 20-ம் நூற்றாண்டில் கூட பகுத்தறிவு இயக்கத்தினரை மதத்துரோகிகள் என்றும் கடவுள் தூஷணை புரிபவர்கள் என்றும், நாத்திகர் என்றும் தூற்றுகின்றனர். இவ்வாறு தூற்றிப்பாமரமக்களை பகுத்தறிவியக்கத்தின்மீது துவேஷம் கொள்ளும் சூழ்ச்சியைக்கையாள்கின்றனர். இம்மட்டோ? இவர்கள் அரசியலில் கூட இவர்களின் மதம் கலந்துகொள்ளுகின்றது! சமூகத்தை மதத்தைக் கொண்டு இவர்கள் உறவுகப்படுத்துகின்றார்களே ஒழிய, சமூகத்தை மதத் தொடர்பின்றி நினைக்க மறுக்கின்றார்கள்.

மதந்தான் அவர்கட்கு எல்லாம்; மதந்தான் அவர்கள் வாழ்க்கைக்கும் ஆதாரம்.

இவர்கள் புரட்டை உள்ளும் புறமும் துருவி தெள்ளத்தெளிய பிறர்க்கு இது புரட்டென்று நமது தலைவர்கள் எடுத்துக் காண்பிக்கலாயினர். இதுதான் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆரவின்கண் பார்ப்பனரல்லாதார் இயக்கமாகவும், சுயமரியாதைக் கொடிக் கீழ் சுயமரியாதை இயக்கமாகவும் பரிணமித்தது. பார்ப்பனரல்லாதார் இயக்கம் விசேடமாய் அரசியல் இயக்கம் எனினும் இது சமூக இயலையும் புறக்கணித்து விடுவதில்லை.

இது பார்ப்பனரல்லாதாரின் அரசியல் சுயமரியாதைக்குப் போராடுவதாகும். இவ்வியக்கம் துவக்கப்பட்டபோழ்து தற்கால புணர்ச்சியுடன் பிறப்பால் சாதிக்குச் செருக்குக் கொண்டவர்களும், இயற்கையாகவே விஷமம் கொண்டவர்களுமான பார்ப்பனரை ஒதுக்கிவிட்டது. ஒருசமூகத்தை அறவே ஒதுக்கிவிட்ட இச்செயலினால், நமது இயக்கம் உத்தியோக வேட்டை இயக்கம்என்றும், எனவே இதனை எதிர்க்கவேண்டும் என்றும் பார்ப்பனர்கள் எண்ணத் துவங்கினர்.

இவ்விகழ்ச்சிக்கும் இடமளிக்காதிருக்கும் பொருட்டுத் தான் நெல்லூரில் கூடியமகாநாட்டில் ந[illegible]கொள்கைகளைத் தழுவி நிற்கும் [illegible]பனரையும் நமதியக்கத்தில் [illegible]த்துக் கொள்ளலாம் என்று [illegible]க்கப் பெற்றது. இதன் தொடர்பா[illegible] நடைபெற்ற விவாதத்தின் தன்மையைப் பற்றியும், இதன் முடிவைப்பற்றியும் இங்கு நான் விவரிக்க விரும்பவில்லை. இத்தீர்மானம் சொற்ப பேர்களின் மிகுதியாலேயே தோல்வியுற்றதால், விஷயம் தலைவர்களாலும் அவர்கள் சார்பினர்களாலும் மிகவும் கவனிக்கத்தக்க முக்கியமான விஷயந்தான் என்பது இதினின்று இனிது விளங்குகின்றது.

எனவே இவ்விஷயம் நாளுக்கு நாள் பொது ஜனங்கள் மனதில் எவ்வளவில் இருக்கின்றது என்பதை நமது தலைவர்கள் கூர்ந்து நோக்கி ஒருவருடனில்லாமல், அனுபோகத்திலிருந்து, இந்தப்புதிய கன்மாறுதல் அத்தியாவசியமெனவும் கருதுகின்றனர். இவர்கள் அரசியல் நுட்பமும் இராஜதந்திரத் தீர்க்கதரிசனமும் குன்றியவர்களல்லர். சுயநலம் கருதி இயக்கத்தைச் சிக்கலில் இழுத்துவிடும் பான்மையினருமல்லர். ஆதலின் இந்த தொல்லையான விஷயம் ஒரு முடிவிற்கு வராமல் இருக்கும் வரையில், அரசியல் அறிவு படைத்த பலரின் கவனம் இதில் ஈடுபட்டுத் தான் இருக்கும் என்பது திண்ணம்.

இவ்வபிப்பிராய பேதம் முதிர்ந்து கட்சிக்குள் பிளவு ஏற்படுத்தாமல் இருந்து விடவேண்டுமே என்பது தான் எனது கவலை. ஒரு அரசியல் கட்சியானது, அதன் நாமத்திற்கேற்ப, அவ்வக்காலத்து அரசியல் நிலவரத்தை ஒட்டி, தனது கொள்கைகளையும் சீர்திருத்திக்கொண்டு

போக வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறுவேன். ஆதலின் நமது அரசியல் இயக்கமானது தனது இளமையையும் வலிமையையும் இழக்காமல் இருக்க வேண்டுமாயின், இவ்விஷயத்தில் முற்போக்குடன் பரந்த எண்ணத்துடன் புனராலோசனை புரிந்து அதற்கேற்ற கட்டுப்பாடுகளையும் வகுத்தமைத்துக்கொள்ளல் வேண்டும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பின்னர் துவக்கப்பெற்ற மற்றோர் பெரும் இயக்கமாகிய சுயமரியாதை இயக்கம், முன்னைய இயக்கத்தின் துணை இயக்கமாய் இருந்து வேலை செய்யும் தன்மையை உடையதாய்க் காணப்படுகிறது. முன்னைய இயக்கம் சுட்டிக்காண்பிக்காமல், அரசியல் முன்னேற்றத்திற்கு சமூக முன்னேற்றமே முதற்படி என்பதை இப்புதிய இயக்கம் வலியுறுத்திக் காட்டுகின்றது. பார்ப்பனரல்லாதார் சமூகத்திலிருந்து பார்ப்பனரை ஒரு காலத்தில் அண்டியிருந்த திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் இப்புதிய இயக்கக் கர்த்தா ஆவர். ஆனால் இவர் பார்ப்பனர் சார்பை நாடியிருந்தமை நமக்கு ஒரு பெரும் சாதகமாகவே முடிந்தது. ஏனெனில், அதனால்தான் பிறருடைய கொள்கைகளின் வேற்றுமையை பக்கத்திலிருந்து அநுபவத்தால் உணர்ந்துகொள்ளும் சாதகம் இவருக்குக் கிடைத்தது.

இவ்வநுபவ முதிர்ச்சியானது இரட்டித்த பலனைக் கொடுத்தது என்று கூறவும் வேண்டுமோ?

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் வழிகாட்டியாய் இருக்க, இவரை திருவாளர்கள் சண்முகம் அவர்களும், ஜியார்ஜ் ஜோசப் அவர்களும் பின் தொடர்ந்தனர். இவர்களும் ஒரு காலத்தில் பொது நலம் என்பதில் மிதமிஞ்சி ஈடுபட்டு, உண்மையை அறியாமல் சிறிது காலம் மயங்கி நின்று பிறகு எது தமது இலட்சியமோ, எது மெய்ப்பலனை அளிக்கக் கூடியதோ அவ்வியக்கத்தைச் சார்ந்தனர்.

வேடன் வலைப்பட்ட வாங்கு, இவர்கள் எல்லாம் சமூகக் கொடுமையாளர்களின் மதப் புரட்டுகளையும் அரசியல் புரட்டுகளையும் அவர்களுடன் இருந்து அநுபவத்திலுணர்ந்து கொண்டு, அவைகளை வெறுத்து, அநுபவ முதிர்ச்சியுடன் இப்பொழுது நமது இயக்கத்தில் பிரகாசிக்கின்றனர். இவர்கள் அநுபவங்களெல்லாம் பார்ப்பனீய சுயநலக்காரர்களின் புரட்டுகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் சான்றுகளாய் நிற்கின்றன.

சொட்டிகளே, சோமாங்களே! நாங்கள் எங்கள் துக்ககரமான அநுபவத்தின் பயனாய்த் தான் இப்பொழுது சுயமரியாதை இயக்கத்தினர்களாக மாறி பார்ப்பனீயத்தை வேரறுக்க முனைந்து நிற்கின்றோம். ஆனால், பிரிட்டிஷ் இந்தியா ஒரு வகையாக இருக்க, திருவிதாங்கூர் வேறொரு வகையாய் இருக்கின்றது. சில விஷயங்களில் பிரிட்டிஷ் இந்தியர்களிலும் நீங்கள் அதிக முன்னேற்றமடைந்திருக்கின்றீர்கள். சில விஷயங்களில் எங்களிலும் அதிகத் தாழ்ந்து காணப்படுகின்றீர்கள். கல்விப் பயிற்சியில் உங்களை ஒத்தார் உயர்ந்தார் இவ்விந்தியாவில் இலர். மற்றைய பாகங்களில் வாயளவில் கூறப்படுவனவற்றை நீங்கள் செய்கையில் கையாண்டு வருகின்றீர்கள்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"! என்பதை முற்றிலும் அறிந்துகொண்டு அதன்படி ஒழுகி வருகின்றீர்கள். இக்கல்வியை ஆண் பெண் சமத்துவமாய் அடையும்படியாக வேலை செய்துவருகின்றீர்கள். பெண் வழியில் சொத்துரிமை அளிக்கும் முறையான மருமக்கள் தாயம் உங்கள் நாட்டில் அதிசயிக்கத் தக்கதாய் அநுஷ்டானத்தில் இருந்துவருகின்றது. இதுபற்றித்தான் உங்கள் இளைஞர்கள் தன் முயற்சியில் அதி தீவிரம் படைத்தவர்களாய் இருக்கின்றார்கள். சென்னையில் உள்ள நாங்கள் உங்கள் போட்டியின் வலிமையை உணரத்துவங்கி விட்டோம். உங்களில் மிகச் சிறந்த மற்றொரு கொள்கையைத் நான் விசேடமாகப் பாராட்டுகின்றேன். அதாவது, காதல் மணத்திற்கு நீங்கள் பெருஞ் சார்பு அளித்திருப்பது. இதனாலன்றோ, நீங்கள் அறிவிலும் உடற்கட்டிலும் முதிர்ந்த சமூகமாய்த் திகழ்வதும்.

ஆனால், உங்கள் சமூகத்தில் ஒரு பெருங் குறை உளது. ஜாதி வேற்றுமை இந்தியாவிற்கே ஒரு பெரும் தீமைதான். ஆனால், இத்தீமை உங்கள் சமஸ்தானத்தில் கொழுத்திருப்பதுபோல் வேறெங்கும் காண்டல் அரிது. ஒரு வைதிக இந்து அரசர் இதில் தலையிடத் தயங்குவார்தான். சட்ட மூலமாகவே சமூக சீர்திருத்தத்தை, அச்சீர்திருத்த உணர்ச்சி சமூகத்தில் பெரிதும் பரவினாலன்றி அநுசரிக்க முடியாது. இருந்தாலும் கிணற்றுத் தவளைகள் (குறுகிய நோக்கம் படைத்தவர்கள்) நசித்து வருகின்றார்கள் என்பது உறுதி. மேலும் புரோகிதர்களின் வலையிற் சிக்கியிருந்த முதியவர்களும் நாளுக்கு நாள் கட்டறுத்துக்கொண்டு வெளி ஏறுகின்றார்கள். சுவாமி விவேகானந்தர் உமது நாட்டைப் பழித்துரைக்கக் காரணமாயிருந்த இத்தீமையை நீங்கள் உடனே அகற்றி, அப்பழியையும் நீங்கள் நிவர்த்தித்துக் கொள்ளல் வேண்டும். எனவே, நீங்கள் ஏனைய துறைகளில் எவ்வாறு இந்தியாவின் பிறபாகங்கட்கு வழிகாட்டிகளாய் இருக்கின்றீர்களோ, அதுபோலவே இத்துறையிலும் இனி நீங்கள் வழிகாட்டிகளாய் இருப்பீர்களென்று உங்களை நான் நிச்சயமாய் நம்புகின்றேன்.

அப்படியானாற்றான், எதிர் பார்த்த முழுநலனும் இந்தியாவுக்கு ஏற்படும். அப்பொழுதுதான் பூலோக சொர்க்கம் என்று கூறப்படும் இந்தியாவும் அப்பெருமைக்கு உண்மையில் இசைந்த நாடாகும்.

சென்னை மாகாணச் சட்டசபை உறுப்பினரும், இராமநாதபுரம்
நாட்டாண்மைப் பெருங்கழகத் தலைவரும்,
சென்னை மாகாணச் சுயமரியாதை இயக்கத் தலைவரும்,
இளைஞர்களின் ஏந்தலாரும் ஆகிய உயர் திருவாளர்

டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியனார்
எம். எல். சி. அவர்கட்கு, திருச்சிராப்பள்ளி
முருகானந்த சபையார்,
அன்புடன் அளிக்கும்

## நல்வரவேற்புப் பத்திரம்.

விருத்தம்

திருவுடைத் தண்டமிழகத்துத் திலகமே! சௌந்திரபாண்டியச்செம்மலே!
பெருமை பெறு சுயமரியாதைத் தொண்டிற் சிறக்கின்ற பெருமான்மிக்க
ஒருமை புறஞ்சிராப்பள்ளி முருகானந்தச் சபையோம் ஓங்கும் அன்பின்
உரிமையுடன் நின்வரவு நல்வரவாகுக வென்றே உவப்பின் ஏற்றேம்.

செந்தமிழ் நாட்டிற் சீர் சால் சேது
நன்னாட்டாண்மை நற்பெருங்கழகத்
தலைமையாள! தனிப்பெருஞ் செல்வ!
வருக வருக இம்மாண்பேரவைக்கே.

தண்ணளி மிக்க அண்ணால்! உலகில் மக்களாய்ப்பிறந்து பன்னலமுஞ் சான்றவர்கள், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய், உலக மாந்தர் உயர் நலங்கட்கே உழைக்கும் ஆர்வமும், ஊக்கமும் கோடல் வேண்டுமென்று மேலோர் மொழிவர். அந்நன்மொழியைப் பொன்மொழியாப் போற்றிச் செப்பருந்தொண்டு உலகு ஒப்பிடப்புரியும் உமது பெருந்தகைமையை உலகில் அனைவரும் அறிவாராதலின் அதனைப்பெரிதும் பாராட்டுதல் எமக்கு எற்றுணையும் இயையதே.

அறிவின் ஆன்றோய்! நாட்டு நலங்கள் பலவற்றையும் பல்லாற்றான் நாடி உறுநலம் புரியும் கோட்பாடுகொண்டு. சென்னை மாகாணச் சட்டசபையின் கண் நீவிர் தொடர்ச்சியாக ஆறாண்டின் மேலாக வீறுபெற அமர்ந்து நுண்மாண் நுழைபுலங்கொண்டு பன்னரும் நலங்கள் பாருளார்க்குச் செய்துவருவதனை யாவரே அறியாதார்?

மாட்சி மிக்க ஆட்சியின் அமைச்சோய்! செந்தமிழ் நாட்டுள்ளதாகிய செல்வச் சேதுநாட்டின் நாட்டாண்மைப் பெருங்கழகத் தலைமையை மேற்கொண்ட ஞான்று தொட்டு, அச்செந்தமிழ்ச் செல்வச் சேதுவேந்தரே போன்று காப்பன காத்துக் கடிவன கடிந்து ஆவன புரியும் நின் அருந்திறனை, வியவாதாரும் நயவாதாரும் யாவரேனும் உளர் கொல்?

அறிவு வீற்றிருந்தத் செறிவுடை உளத்தோய்! தண்டமிழ் நாட்டுத் தகைபெறுமக்கள் பண்டைப் பெருமையைக்கொண்டிலராய்த் தாழ்வுற்றிருப்பதை ஓர்ந்துணர்ந்து, நயமறியா மக்கட்குச் சுயமரியாதை யென்னும் அறிவுச்சுடர் கொளுவுவான் தொடங்கிப் பொது நலத் தொண்டுகள் புரியும் நின் தகைமையை இந்நாட்டினரன்றி எந்நாட்டாரும் ஏத்துவரென்பதை யாம் இயம்பவும் வேண்டுமோ?

பொது நலத்தினையே போற்றும் பெரியோய்! இற்றைஞான்று தமது தனிப்பெருந் தலைமையின் கீழ், யாம்நடாத்தும் இச்சமூக சீர்திருத்தநாடகத்தை சீர்பெற நடத்துவதில் யாமுஞ்சமூகத்தொண்டினையோராற்றலாற்றுகின்றேமாதலின், அறிவீறுபெற்றத் தலைமைமேவியதம்மை எளியேம் எய்ப்பினில் வைப்பாகப் போற்றவேண்டுமென்றே; ஆதலின் தாங்கள் எமக்கு அன்னவருநிதியாக எய்தியதைப் பாராட்டி மகிழ்தற்கு எல்லை இல்லை.

வீரமும் வெற்றியும் ஆரத்திகழ்வோய்! இத்தகைமைகள் யாவும் இயல்பின் வாய்ந்த நீவிர் பொறையாற்றும் புயவலி தாங்கியும், நிறையாற்றும் உளவலி போக்கியும், நீடூழி வாழ்க வாழ்க என்றும்; பெரும் பொறுப்பு வாய்ந்த உயர்நிலை பலவும் உரிமையின் எய்துக என்றும், பொது நலத்தினையே போற்றுக என்றும் நாம் வாயார வாழ்த்துகின்றோம், நுந்தகைமையை என்றும்போற்றுகின்றோம். நுந்தலைமையை என்றும் ஏற்றுகின்றோம்.

வாழி வாழி வையகம் போற்ற வாழி வாழி.

வரகனேரி. | இங்ஙனம்,
24—12—1929 | திருச்சி முருகானந்த சபையார்,

# இதுதானா ஆஸ்திகத்வம்?

(உறந்தை R. இராமலிங்கம்)

கடவுள் கடவுளென்று காலசக் தொலைக்காதே; தெய்வம் தெய்வமென்று தேச மக்களைக்கெடுக்காதீர்கள் என்று குடி அரசு கூறுவதைச் சிறிது ஆழ்ந்து சிந்திக்க அவகாசமின்றிய பக்த சிரோண்மணிகள் குடி அரசு நாஸ்திகப் பிரசாரம்செய்து, நந்தேய மக்களை நாசமாக்க வந்தது தான் என்று கோபித்துக் குறை கூறுகின்றார்கள். கீழ்க்கண்ட வண்ணம் பக்தி செய்வது தானே? நமக்கு இன்றியமையாத ஈஸ்வர பக்தியா? இந்த பக்தி நமது நாட்டின் மக்களை எவ்விதமேனும் ஈடேறச் செய்துவருகின்றதா? இந்த பக்தி இல்லாவிடில் நம் தேசம் நாசமாகத்தானே போய்விடும்? ஹே! பக்தியில் பழுத்த பரம தயாபரர்களே! இதைச் சற்று சிந்தியுங்கள்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்குகிறதென்னும் தென் பழனித் திருவாலயத்தில் மச்சக்காவடி, சர்ப்பக் காவடி, பால் காவடி, பருப்புக் காவடிமுதலியன கொண்டு வரும் அன்பர்களுக்கு அங்கு நிகழும் அற்புதமே அற்புதம். அதை எவ்வாறு தானெடுத்தியம்பலாகும். பழனி மலையைச் சுற்றிப் பரம சாது வேடம் பூண்டு பிச்சை யெடுத்துண்ணும் சில பேயர்கள் உயிருள்ள சேவலின் இறகுகளைப் பிடுங்கி அதன் மீது மஞ்சளை தடவி சட்டியில் வைத்து மேற் சட்டியால் மூடி. சுவாசப் போக்கு வரத்துக்குச் சிறிய துவாரமமைத்து காவடிக் கட்டி அதிலமைத்துக் கொண்டு 10, 12 சோதரர்கள் கூடிக்கொண்டு உண்டியல் குடமொன்று குலுக்கிக் கொண்டு மேளவாத்தியத்தோடு வரும்பொழுது உண்டியல் கொண்டு வருபவன் ஏதோ ஒர் ஊர் பெயரை சொல்லி அவ்வூரிலுள்ள இப்பக்தருக்கு தண்டபாணியே பிரத்தியட்சமாகி சேவலை அறுத்துச் சமைத்துக் காவடி கட்டிப் பரிசுத்தமாகத் தன் சந்நிதி வந்தால் அச்சேவலை உயிர்ப்பித்துத் தருவதாகச் சொன்னது கொண்டு இந்தச் சோதனைக் காவடி வருகின்றது. இனி ஆண்டவனுக்குச் சிறப்பாக அபிஷேக அலங்காரம் அர்ச்சனை நைவேத்திய மாதிகளுக்குப் பொருளுதவுவோர்களுக்குத் தண்டபாணிக் கடவுள் தேவையான சம்பத்துகளைத் தந்து காப்பாற்றுவார். இது சமயம் தவறவிடாதீர்கள். உண்டியல் உண்டியல் என்று ஓலமிட்டு இடும்பன் சந்நிதி வருமளவும் ஏதோ கிடைத்ததை நிறப்பிக் கொண்டு அங்கு வந்து காவடிக்குப் பயபக்தியோடு பூஜை முதலியன செய்வது போலப் பாசாங்கு செய்து காவடியில் கட்டியுள்ள சட்டியை அவிழ்த்து அதில் அளவற்ற துயரமனுபவித்துக் கொண்டு குற்றுயிராயும் சிறகுகள் குறைந்தக்களாயும் இருக்கும் சேவலைத் தூக்கிக் காண்பித்துப் பார்த்தீர்களா 'தண்டபாணியின் திருவருட் சக்தியால் இச்சேவல் மீது சமைத்த குழம்பின் குறியும் அது உயிர் பெற்றிருக்குந் தன்மையும் அதற்குச் சிறகு முளைத்திருக்கும் அற்புதமும்' என்று ஆரவாரித்துக் காண்பித்துப்! பின்னர் அச்சேவலை உடனே சட்டியில் வைத்து மூடி தூக்கிச் சென்று அதை அறுத்துச் சமைத்து அதற்குப்பேடிக மதுவோடு புசித்து ஆனந்த பரவசமடைந்திருக்கின்றார்கள். இதுதானய்யா! கலியுக வரதனின் கண் கண்ட காட்சி. இந்தச் சூதை அறியாத சில மூட பக்தியில் முதிர்ந்தோர்கள் தங்கள் கனவிலோ அல்லது கோடாங்கிக்காரன் மூலமாகவோ கண்டு கேட்டதைக்கொண்டு, துவரம் பருப்பு சர்க்கரையாவதாயும், உப்பு கற்கண்டாவதாயும், தீர்மானித்துக்கொண்டு காவடி கட்டி வந்து அவிழ்த்துப் பார்க்குங்கால் துவரம்பருப்பு பருப்பாகவும், உப்புஉப்பாகவே இருக்கின்றது அப்பொழுதிவர்கள் அளவிறந்த சோக முற்றிருக்குமிடத்து அங்கு இவ்வற்புதக் காட்சியைக் காணச் சூழ்ந்திருப்பவர்களிலோர் சோதகன் தண்டபாணி ஆவேசங்கொண்டவன்போல் வந்து நீங்கள் காவடி கொண்டு வரும் வழியில் தீட்டு முதலிய அசுத்த மேற்பட்டு விட்டதால் இவ்வாறாயிற்று என்று அவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிடுகிறான். அதையே ஏழை மதியீனர் நம்பியே விடுகின்றார்கள். இவ்வாறே திருச்சி புத்தூர் குழுமியாயி திருவிழாவில் ஆயிரக்கணக்கான ஆட்டினங் கன்றுகளின் கழுத்தை கடித்து அவ்வளவு இரத்தத்தையும் கொஞ்சமேனும் சிந்தவிடாமல் குடிக்கிறதும திரிகால வர்த்தமானங்களைத் தெரிவித்துக் கோரும் வரமெல்லாம் குறைவின்றிக் கொடுக்கப்பெற்று, அவ்வாறே அவர்கள் பலனடையும் விஷயத்தில் சமாதானம் செய்துகொள்ளுவதுமாகவே இருக்கின்றது. இங்ஙனம் செத்த சேவல் பிழைப்பது சாத்தியமானால், இதுவரையிலுமிறந்த எண்ணிலா அரசர்கள் பிழைப்பதும் துவரம் பருப்பு பொன்னாவதும், உப்பு வெள்ளியாவது அசாத்தியமாகுமா? இது வரையிலும் எங்கேனும் அங்ஙனம் நடைபெற்றதுண்டா? இதன் உண்மை புணர்வு நமது ஜன சமூகத்திற்கு எக்காலத்து வாய்ப்பதாகுமோ எனக்கூறின், இதற்குச் சில வேதாந்திகள் கூறுவதாவது: எந்த தேசத்திலாகினும் மக்களெல்லோருமே, இவ்வித அறிவு ஆராய்ச்சியில் சிறந்த சிலர்களாகவே இருக்கின்றார்களா? அகனவன் கர்மானுசாரமே அறிவு மாற்றுலு மமைந்திருப்பதால். உண்மை புணர்வில் தேர்ந்தசிலத்தன்மை பெற வேண்டுமானால் 'பல்லூழி காலம் பயின்ற ஈனயர்ச்சிக்கில் நல்லறிவு சற்றேங்கும்' என்ற பிரமாணத்தால் ஒவ்வொரு ஜென்மங்களிலும் இவ்விதஈஸ்வரவழிபாடு செய்து வந்தால் தானே அடையலாகும் அவ்வன்மின்றி ஏக ஜென்மத்திலேயே எவனும் அடைவது சாத்தியமாகாது. நெருப்பை தெரிந்தும் தெரியாமலும் தொட்டு விட்டால் அதுஎவ்விதத் தம் சுட்டுத்தீருவது சுபாவம் போன்று பக்தியின் பரமார்த்த ரகசியம் தெரிந்தோ தெரியாமலோ நம்பி புரிந்து வந்தால் காலாந்தரத்தில் அவ்வீசுவரனுக்கிரகத்தால், உண்மையுணர்வுதானே வெளியாய் விடும். அது வரையிலும் இவ்வித பக்தியின்வாயிலாகத்தானே பரிபக்குவம் பெற வேண்டும். இதையும் விட்டு விடச் செய்தால் உடனே உண்மையுணர்வையுமடையப் போவதில்லை. கிரமமாய் பரிபக்குவமுமடையாமல் உபயப்ரஷ்டர்களாகி விடுகின்றார்கள். ஆகலின் இவ்விதபக்தி மார்க்கத்தைப் பழிப்பது மிக்க பாவமாகுமெனப் பகர்கின்றார்கள். மேற் கூறிய உண்மையுணர்வு கல்வி கேள்வி ஆராய்ச்சியிடச்சித்தமாகிலால் வாய்ப்பதா? அல்லது இவ்வித தெய்வபக்தியினாலேயே சாத்தியமாவதா? என்பதைச் சிறிது அவசரப் படாமல் ஆழ்ந்து சிந்தித்துணருமெவருக்கும் நன்கு விளங்காமற்போகாது. இவ்வாறு போதித்துத்தானே மக்கள் மதியை மலினமடையச் செய்த மர்மத்தை அறிய முடியாது. மடையர்களாகி, எவ்வித நற்குணநற்செய்கையு மற்ற துஷ்டரோகியாயிருப்பினும் அப்பார்ப்பனனை ஒருமுறைக்குப்பன் முறை அவன் வீட்டின் வாயலில் காத்திருந்து அழைத்து வந்து அவன் காலில் அநேக முறை விழுந்து நமஸ்காரம் செய்து அவனது குடும்ப சாப்பாட்டிற்குப்போதுமான சாமக்கிரிகளும் தட்சணை முதலானதும் கொடுத்தும், அந்தச் சாமக்கிரியை எல்லாம் தலையில் சுமந்து அவன் வீட்டில் கொண்டுபோய் கொட்டியும், கோயில்களிலுள்ளகல்லுச்சாமிகளைக் காண நமக்குக் கண்ணில்லா திருப்பதாயும், அவன்தான் பாக்கும் தன்மை வாய்ந்த பார்ப்பானயிருந்து நமக்குக் காண்பித்து கடவுளருளை கையில் வாங்கிக்கொடுத்து அதனால் மாஞ்செடியாதிகள் சிறிது சிறிதாய் பரிபக்குவம் பெற்று வளர்வது போல உண்மையுணர்வுவளர்ந்துவருவதைக்கண்டுகளித்த கண்ணுடையோர்கள் நமது தேசத்தில இத்தனை கோடி பக்தசிகாமணிகளிருப்பதினால் தான்மேற்றாசர்காலில் மிதிக்கப்பட்டு என்றும் மீளா அடிமைகளாகவும், அஞ்ஞானிகளாகவுமிருக்கும்படியாயிற்று. மேல் தேசத்தாரகளெல்லாம் இவ்வித பக்தியினால் தானே மேம்பாடு பெற்று பசிப்பிணியையாயினும் சிறிது போக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்துவெனப் பிறந்தோன் எவனேனும் கடவுள் என்னும் நம்பிக்கையும் அவரைபக்தி செய்யாதவனுமுண்டா? "சோறுபோடாத சுவாமிதானோ? சொர்க்கத்தி சுகம் கொடுக்கப்போகிறது என்ற பழமொழிப்படி அரை வயிற்றுக் கூட அன்னம் கிடைக்காமல் அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் மக்கள் படும் மனோவேதனை தெரியாத வாசகர்களிருப்பார்கட்குச் சொல்ல வாய்க்கூடவில்லை யாதிருப்பது ஆச்சரியமன்றோ [illegible] உண்மையுணர்வு வேதசாஸ்திர கல்வி [illegible] னால் பெறப்படுகிறது. அதுவும் [illegible] ஞானசிரமமாயிலால் ஜென்மப்ராமணனாலேயே சாத்தியமாகிறது. பக்குவமில்லா பார்ப்பனரல்லாதார் அவைகளைப் படித்தால் நாக்கை அறுக்கவேண்டும்; காதால் கேட்டால் அதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்; இருதயத்தில் நினைத்தால் அதைக் கிழிக்க வேண்டுமென்று மனுநீதி நூல்களால் கட்டிய கட்டுக் கஞ்சாகுசெய்து இக்குடி அரசு, திராவிடன், குமரனாகிய பத்திரிகை வாயிலாய் எத்தனையோ லட்சக்கணக்கான ஜனங்களுணர்ந்து கொண்டேவரும்பொழுது சென்னையில் கூடிய சனாதன தர்மிகள் மகாநாட்டில் திரு. [illegible]சந்திர சக்கிரவர்த்தி என்னும் வங்காளப் பார்ப்பனர் தனது அக்கிராசனப் பிரசங்கத்தில் மதம் கெட்டுப் போய் விட்டது. நமது பழைய சனாதன தர்மத்தை புனருத்தாரணம் செய்ய வேண்டும். வேதத்தைச் சொல்லி அதன்படி நடப்பதுதான் ஆஸ்திகனது அறிகுறி; நமக்கு வேதமே ஆதாரமாகும்; வேதத்தின் தத்துவமும் உட்பொருளும் மனுதர்ம சாஸ்திரமாகும். மனுதர்ம சாஸ்திரமோ பகவானால் சொல்லப்பட்டது. கடவுள் ஏற்படுத்திய சட்டம்தான் மனுதர்ம சாஸ்திரம். விஞ்ஞான சாஸ்திரமும் இயந்திர சக்திகளும் மனித சமூகத்திற்கு மிகவும் கேடானது. மேல் நாட்டுக் கொள்கை நமக்குதவாது" என்று பேசியிருப்பதை உண்மை பிராமணனுக்குரிய, உயரிய லட்சணமமைந்தவந்த பிராமணனாவது தன்மனசாட்சிக்கு தறிய ஏற்கலாகுமா? அங்ஙனமானால் இப்பார்ப்பனர்களெல்லாம் மனுதர்மசாஸ்திரத்தில் கூறியுள்ள தர்மங்களில் ஒன்றேனும் தவறாது அனுஷ்டிப்பார்களா? அங்ஙனமும் சாத்தியமாகுமா? இந்த அரிய உபதேசத்தைச் செய்வதற்கு இத்தென் தேசத்தில் எவரும் அகப்படாது வங்காள தேசத்தினின்று வரவழைத்தோர்களது சாமார்த்தியத்தை நாம் எவ்வாறு தான் புகழக்கூடும்? கால தேச வர்த்தமானங்கட்கேற்கத் தான் மனுதர்மத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டுமெனில் இக்காலத்திற்கேற்க சாரதாசட்டம் வந்திருப்பதை யோசிக்கவேண்டியதிருக்க அதை ஒழித்து விடுவதற்கு எதற்காகசத்தியாக்கிரகம்செய்ய வேண்டும்? அதிபால்யத்திலேயேகலியாணமாகி தந்து வாயுக்கோரகள் அனைவோரும் வேறெவ்விதஇச்சையுமின்றி மோட்ச இச்சையே முக்கியமாய்த்தான் கொண்டிருக்கிறார்கள் என்பதை எந்த பிராமணனாவது நிரூபிக்கலாகுமா? எத்தனையோ ஏழைப் பார்ப்பனர்கள், தமது பெண்களுக்கு வயது வந்தவுடனே அவளுக்கேற்ற வரனைத் தேடுவதில் அவர்கள் படும் பாடு மனவே

## மக்களின் அறியாமை

எப்பொழுதும் நமது சகோதரர்கள் சுயமரியாதையின் முழக்கம் இந்தியா முழுமையும் தொனிப்பதும், அவர்கள் ஆரியரையும், திராவிடரையும் பற்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் வாசிக்காத காரணமே விஷயமறிந்து கொள்ளக் கூடாதவர்களும் இருக்கிறார்கள். குறைந்தது காலத்தில் 5மணி நேரமேனும் இதற்காக செலவு செய்தால் அதுவே போதுமானது. இரவில் படுக்கும் போதும் அல்லது மற்றபடி அவரவர்களுக்கு ஏற்றவாறு ஓய்வு நேரங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாக வாசித்தாலும் எளிதில் விஷயமறிந்து கொள்வதுடன், பிராமணர் என்று சொல்லிக் கொள்பவர்களின் அறியாமையையும் ஒழுங்கீனமாக நடந்து கொள்வதையும நன்கு தெரிந்து ஒருவாறு தெளிவடையலாம். உதாரணமாக நக்ஷத்ரப் படிப்பாளர் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட

தனை யாருக்கும் தெரியாமலிருக்கிறது. அந்த அக்ரமானது சாஸ்திரத்தில் ஒருவாறு சாத்தியமாயிருப்பது அவரவர் மனச் சாட்சிக்குத் தெரியாமலா இருக்கின்றது. எதற்காக இவ்வார்ப்பாட்டம் செய்ய வேண்டும்? இதுவரையிலும் இவர்கள் மனுமாதி தரும சாஸ்திர விதிகளில் ஒரு சிறிதும் வழுவாது அனுஷ்டித்து வந்த வைதிக கர்மத்தால் இளங்குழந்தைகளை மணம் புரிவித்து எத்தனைப் பெண்களை நிர்க்க சுமங்கலியாக்கி விட்டார்கள் அல்லது எத்தனைபேர்கள் யோகினிகளாயிலகுகின்றார்கள். எத்தனை விதவைகள் தங்களது வைதிக கர்மத்தால் எல்லோருமறிய புஷ்பவிமான மேறி பூலோகம் விடுத்து சொர்க்காதி லோகஞ் செல்றார்கள்?

இப்பொழுது பார்ப்பனர்கள் யாகத்தில் மாமிசம் புசிப்பதினாலும் பதினாயிரக் கணக்கான பார்ப்பனர்கள் யுககாலத்தில் புசிப்பதினாலும் கோரும் பலனெல்லாம் குறைவின்றிப் பெறுவதாயும்; கூறுவோர்கள் இதுவரையிலும் எத்தனை பேர்கள் என்னென்ன பலன்கள் அடைந்திருக்கின்றார்கள்? ஆ!, கோழியாதிகளைப் புசிக்கும் பார்ப்பனரல்லாதார் எவ்வளவுகொடியகாலத்தும் எவ்வித பசியால் பீடிக்க படினும் மாடுகுதிரையாதியமாமிசத்தைப் புசிக்கத்துணியாரே. இவர்கள் மாமிசம் புசியாத கொல்லா விரதியர்களென கூறிக்கொண்டு இவர்கள் மாமிசம் புசிக்கத் துணிந்திருப்பதானது இதற்குமுன் மாமிசம் புசியாதிருந்து இதற்கு உடன்படலாகுமா? இவர்களது இவ்விஷ்ணுவாதி தெய்வங்களும் இந்த மாமிசாதி உணவையே பெரிதும் விருப்பமுடைத்து இவர்களேனோ கொல்லாவிரதியரென கூறி நடிக்க வேண்டும். இதை நம்பாதவன் தானா நாஸ்திகன்? இதுதானா ஆஸ்திகம்?

இவ்விதம் மேம்போக்கில் இருந்து கொண்டிருப்பதை நாம் அடிக்கடி கண்கூடாகக் காண்கிறோம். மேற்படியார்களே சில சமயங்களில் சில பிராமணர் என்று சொல்லிக்கொள்வோர் ஏதோ விஷயங்களைப்பற்றி ஏதோ நமது பத்திரிகைகளைப்பற்றியோ இகழ்ச்சியாகச்சொன்னாலும்கூட ஒருவாறு ஜாடையாகவே இருப்பதை நாம் ஒவ்வொரு நாளும் காண்கிறோம்; இவர்கள் மரியாதை என்னும் ஓர் கட்டுப்பாட்டிக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமேயல்லாது பழைய பழக்கத்துக்காகவும் தங்களுடைய சுயமரியாதையை விலைக்கு விற்றுவிட்டு கண்மூடி சாமிபோல் காதில் விழாதது போலும் இருந்து வருகிறார்கள். ஆண்மையற்ற ஆண்பிள்ளைகள் என்று வெளியில் உலாவும் இவர்கள் இவ்விதம் இருப்பது ஒன்றில் மட்டுமின்றி ஒவ்வொருதுறையிலும் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

உதாரணமாக வெளிப்புறங்களிலும் இன்னும் உத்தியோகத்துறையிலும் சரி, கடைகளிலும் சரி, தனக்கு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனானாலும் சரி, பிராமணனாயின் அவனை சாமி, சாமி என தன் வாய் கூசாது அவை கூவி அழைக்கிறார்கள். ஆகையால் என் இவ்வார்த்தை இவர்கள் இரத்தத்திலிருந்து ஊறினதால் உண்டாகிறதென்று சொல்லக்கூடாது? ஐயோ எங்கள் இரத்தத்தில் ஊறிப்போன இப்பேதமைக்கு என்று பேய் முறையிட்டுக் கொள்வது?

உம்மைப்போல் ஒரே வழியாய் வந்த பிறகு ஒரே ஊரில் வளர்ந்து ஒரேபள்ளியிலும் வாசித்து ஒரேஇடத்திலும் வேலை பார்க்கும் ஒரு பிராமணனை இவ்விதம் வாய்கூச்சமென்பது சிறிதேனுமில்லாமல் சாமி, சாமி என அழைப்பது பேதமை என்பதை சிறிதேனும் யோசிக்கக் கூடாதா?

உதாரணமாக 30 பேர்வழிகள் ஒரே இடத்தில் வேலை பார்ப்பவர்களாக இருந்தும் இதில் 4 பேர்வழிகள் மட்டும் பிராமணராக இருந்தும் ஏதோ ஒரு சந்தோஷத்தின் அறிகுறிக்காக தேக் கச்சேரியோ அல்லது வன போஜனமோ செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் அந்த நால்வருக்கு மட்டும் தனியான பாத்திரத்தில் ஆகாரங்களும் இலையாயின் காப்பிமட்டுமோ சாப்பிட முன்னதாகவே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்கிற கண்டிப்பின் பேரிலேயே சம்மதிக்கிறார்கள் என்றும் படித்தவர்களையே எவ்வளவு நேர்மையில் அவர்கள் வைத்துக் கொண்டும் நடத்திக் கொண்டும் வருகிறார்களென்பதை யாவரும் மறுக்க முடியாது இதை எந்த வண்பனாவது கவனித்து இதனால் நமக்கு ஏதேனும் சுயமரியாதை உண்டா என்பதை சிந்திப்பதே இல்லையாது. இன்னும் படித்தவர்கள் என்று சொல்லும் நம்மை இவ்வாறு அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நடத்துகிறார்கள் என்றால் இன்னும் படிக்காத பழைய பாட்டன்களையும் பாட்டிகளையும் அவர்கள் எவ்வாறு நடத்துவார்கள் என்பதை வாசகர்களே அறிந்து கொள்ளட்டும்.

இம்மாதிரி முறையற்ற வழியில் சில பிராமணர்கள்சொல்வதைக் கேட்டுக்கொண்டு தங்கள் காதில் பஞ்சடைத்தவர்கள் போல் ஜாடையாக இருப்பவர்களைக் கண்டால் உடனே கடவுளை நினைத்து நான் கீழ்கண்டவாறு முறையிட்டுக்கொள்வதுண்டு. இருச்சியில் பெரிய வீதி முதல் சின்னவீதிசந்துபொந்துகள் வரை சுமார் 4000 இடங்களில் கோயில் என்று ஒன்றைக் கட்டிக் கொண்டு அதில் சதா காலமும் குடிகொண்டிருக்கும் கடவுளே இம்மாதிரி நம் சுயமரியாதை என்பதை இழந்து நடைப்பிணமாக நானும் ஓர் மனிதன் தான் என்று வெளியில் வரும் இந்த வீரர்களை ஏன் தாங்கள் திருத்தக்கூடாது என்று இறைஞ்சிக் கேட்டுக் கொள்வதுண்டு. ஆகையால் சகோதரர்களே இனியேனும் உங்களைப் போலுள்ள ஒரு பிராமணன் இகழ்ச்சியாகவோ அல்லது அறியாமையாலோ அல்லது குதர்க்கமாகவோ நமது குடியரசைப்பற்றியும் திராவிடரைப் பற்றியும் பேசுவரேல் அவர்களுக்கு நல்லவிதமாகவே விஷயங்களைச் சொல்வதுடன் இனி அவ்வாறு நடந்து கொள்ளாமலிருப்பதற்கும்தகுந்த எச்சரிக்கை செய்யுமாறு மீண்டும்கேட்டுக்கொள்கிறேன் என்று சிங்காரம் எழுதுகிறார்.

---

## "கொக்கிர குளம் சகோதர ஐக்கிய சங்கம்"

### 8-வது வருஷப் பூர்த்தி விழா

திருநெல்வேலி, கொக்கிர குளம், செல்வ விநாயகர் தெருவில் 18-12-29 இரவு 9-மணிக்கு மேற்படி சங்கத்தின் 8-வது வருஷப் பூர்த்திவிழா கொண்டாடப்பட்டது. ஆண்களும் பெண்களுமாகப் பலர் சங்க அறை முன்னலைக்கப்பட்டிருந்த பந்தலில் வந்துகூடினர். மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியின் குடும்பப்படத்திற்கு பூமாலையிட்டு பஜனையுடன் ஊருச்சுற்றி வந்தபின் திரு. பி. வி. பெருமாள் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் நடந்தது. முதலாவது திரு. மாணிக்கம் பிள்ளையவர்கள் தேவாரம் பாடினர். அக்கிராசனருக்கு சங்கத்தின் பேரால் பூமாலை பூட்டப்பட்டது. பின் சங்கத்தின் 8-வது வருஷ ரிப்போர்ட் சங்க சபைத்தலைவரால் வாசிக்கப்பட்டது.

அதன் பின் "ஆதிதிராவிடரும் சங்கங்களும்" என்பதைப்பற்றி சங்கத்தின் சபைத்தலைவர் ஓர் உபந்யாசம் செய்தனர். ஆதிதிராவிடரின் முன்னேற்றத்திற்கு அவர்கள் ஆங்காங்கு சங்கங்கள் நியமித்து ஊக்கமுடன் உண்மையான குல ஊழியம் செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறினர். மேலும் சென்னையில் தாழ்த்தப்பட்டோரால்கொடுக்கப்பட்ட வாழ்த்துப்பத்திரங்களுக்கு கனம் வைசிராய் அவர்கள் கூறியுள்ள பதிலில் சிலமுக்கியபாகங்களை வாசித்து அதன் கருத்துகளை விளக்கிக் கூறி அவ்வாறே அவர்கள் சிக்கனம், ஒற்றுமை சுய உதவி முதலியவைகளை கையாடவேண்டுமென்றும்,முக்கியமாக ஆதித்திராவிடப்பிள்ளைகளுக்கு (ஆண்பெண் வித்தியாசமின்றி) கூடுமானவரையில் காருண்ய கவர்ன்மெண்டார் செய்யும் உதவியையும் கைக்கொண்டு போதியகல்வி கற்பிப்பது அவசியத்திலும் அவசியமாகும் என்றும் அதன் உண்மை விளக்கி இனிது பேசினர்.

பின் அக்கிராசனர் சங்கத்தின் இராப்பள்ளிப்பிள்ளைகளுக்குச் சில சிறு வெகுமதிகள் கொடுத்தனர். அதன்பின் கொழும்பிலுள்ளமேற்படி சங்கத்தின் மெம்பர்கள் வருஷப்பூர்த்தி விழாவிற்காக அனுப்பிய வாழ்த்துதல் சந்தோஷத் தந்தி வாசிக்கப்பட்டது.

இறுதியில் அக்கிராசனர்முடிவுரை கூறியபின் அக்கிராசனருக்கும் சபையோருக்கும் நன்றி கூறி சிற்றுண்டி தாம்பூலம் சகலருக்கும்பரிமாறப்பட்டு ராஜவாழ்த்து மங்களபஜனைக்கோஷ்டி நடந்து இரவு 12-மணியளவில் கூட்டம் இனிது கலைவுற்றது என்று எம். சண்முகம் கௌரவ காரியதரிசி தெரிவிக்கிறார்.

---

## தெய்மாப்பட்டி வைதிகர்களின் குறும்புத்தனம்

அன்புள்ள நண்பர்களே! 1-12-29 ல் வெளிப்போந்த நம் அரிய குடிஅரசில் அ. சோமசுந்தரம் வரைந்துள்ள வியாசத்தை கண்ணுற்றதும், வைதிகர்களின் கொடுமையை நினைந்து என் உள்ளத்தில் ஆற்றொணு துயரம் பொங்கி எழுந்தது. என் செய்வது? பண்டைய மூடப்பழக்க வழக்கங்களில் முழுகிப்போன வைதீக பிசாசுகளின் தீர்மானங்களும், அவர்களின் கொள்கைகளும்இக்காலவீரஇளைஞர்களிடம்பலிக்காதென்பதுஎன்முக்கிய கருத்தாகும். ஓ!வைதீக நண்பர்களே! தன் மதிப்பைக் காக்க வகையறியாமல் கிழிந்த பஞ்சாங்கத்தையும், காய்ந்த தருப்பையையும் கையிற் தாங்கி பாமரர்களை வஞ்சித்துப் பொருள் பறித்துண்ணும் புரோகித கூட்டத்திற்கு வக்காலத்து வாங்கி பேசும் உங்களின் புத்தியும் மிக அழகிதே! அந்தோ! இத்தகைய மூடமதிபெற்ற மக்களே! நினைக்குந்தோறும் உள்ளம் வருந்துகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இத்தகைய உருவங்கள் நமது பூமியில் வசிப்பது பாரதத்தாயின் துர்ப்பாக்கியமேயாகும். ஓ!நண்பர்களே! வைதீகக் கூலிகள் இன்னும் எத்தகைய தீர்மானங்கள் செய்தபோதிலும் அவைகளை நாம் வீரத்துடன் உடைத்துத் தள்ளி எத்தகைய காரியங்களிலும் சுயமரியாதை மணமாகவே செய்ய முன்வரவேண்டுமென்பதை எமது அருமை நண்பர்களுக்குத்தாழ்மையுடன்தெரிவித்துக் கொள்ளுகிறோம் என்று தெய்மாப்பட்டி திரு. நடராஜன் எழுதுகிறார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தொருவித சன்மார்க்கமுமில்லாமல் எதையும்சமயமென்றேசாதிக்கிறோம்.

பின்னும் வைசிராய் உங்கள் நாகரீகத்தில் வருணாச்சிரம நிர்பந்தமே பிரதானமாகக்காண்கிறது உலகத்தில் சாசுவதமானஒருவிஷயம்கிடையாது. ராஜியத்துறைபொருளாதாரத்துறை மனோபிவிருத்தி முதலியவற்றில் இக்காலத்தில் தோன்றிவரும் மாறுதல்களை கவனித்தால் கோடிக்கணக்கான ஜனங்கள் தாங்கள் வாழும் சமூகத்தில் சேர்ந்துகொள்ள முடியாத தடையைக் கடைப்பிடித்து வந்தால் இந்து சமூகம் பலம் குறைந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை என்று நம் புத்தியில் படும்படியாக உபதேசம் செய்கிறார்.

ஓவியத்தில் காவியத்தின் அழகைக் கண்டு அதன்கவியில் போலிவுபார்க்கும் திரு கலியாண சுந்தர முதலியார் அவர்கள் காவியக்கதையின் அசம்பாவிதங்களை எடுத்துக் காட்டினவர்களை அடக்குவதற்காக லார்டு கோஷன் கவர்ன்மெண்டை சமயப் பிழைப்பாளர் தன்னை மதிப்பதற்குக் கூப்பிட்டார். இப்பொழுது லார்டு கோஷன்கவர்ன்மெண்டுக்குமேலான கவர்ன்மெண்டின் கர்த்தாவான லார்டு இர்வின் அவர்கள் சொன்னதற்கு என்ன பதில் சொல்லுகிறார். சபையில் இஷ்டம்போல் தன் பக்கமிருப்பவர்கள் சந்தோஷப்படுவதற்கும் பேசுவதால் சமூகங்களுக்கு நன்மை பயக்காது. அது பண்டிதத் தன்மையுமன்று.

ராஜாங்கத்தில் கூசாமல் பரிபூரண விடுதலை கேட்பவர்கள் மனம் இந்த சமூகத்தில் பிறரைப்போலவே சரீரம் படைத்து உணர்ச்சி எண்ணம் யாவும் ஒரே மாதிரியாகவுள்ள ஒரு சமூகத்தினரை ஆயுள்கால முழுதும் கேவலமான வாழ்க்கை வாழ்ந்து அடிமையாக விருக்குமாறு நிர்பந்தித்து, அவர்கள் முன்னேற சாத்தியமில்லாமற் செய்திருப்பதையும் செய்வதையும் போக்குவதற்கு மனமிரங்கவில்லையே? அக்கொடுமையே இந்து மத தருமமென்று அதை நிலைநிறுத்த சனாதன தருமமென்னும் சபை கூடினால் பரிபூரண விடுதலை கேட்பவர்களும் சுயராஜ்ஜியம் கேட்பவர்களும் தங்கள் பிரசங்கத்தில்நீண்டாளை போக வேண்டும் என்னும் ஒருவார்த்தையைச் சொல்லிவிட்டு அந்த சனாதன சபைக்கு தந்தியாலும் கடிதத்தாலும் ஆசி கூறுகிறவர்களாகவும் அந்தரங்கமாகத் தூண்டி விடுகிறவர்களாகவும் கலந்துகொள்ளுகிறவர்களாகவும் இருக்கிறார்களேயல்லாமல் அக்கொடுமைகளைப்பத்திரிகைகளிலும் பிரசங்கமேடைகளிலும் பகிரங்கமாகக் கண்டித்து சன சமூகங்களுக்கு அதனால் வரும் நன்மைதீமைகளின் உண்மைகள் எடுத்துச் சொல்லுவதில்லையே. ராஜாங்கத்தார் சமயத்தில் பிரவேசிக்கப்படாதென்றும் பிரவேசிக்க பிரியமில்லை என்றும் சொல்லும் நீதிமான்கள் சமூகத்திலுள்ள கொடுமைகளைப் போக்குவதற்கு நீதியை எடுத்துச் சொல்லப்படாதோ, நமது சமயத்தில் நீதிதான் இல்லையோ, நமது சமயத்தில் நீதியே இல்லாவிட்டால் நீதி கற்பிக்கவேண்டும் இல்லையேல் அழிந்துபோகவேண்டுமென்று சொல்லுகிறவர்கள்பேரில் கோபிக்கும் வீரமும் குற்றமும் துன்பப்படுகிறவர்களின் துன்பத்தில்காட்டினால் எந்த தெய்வம் தான் குற்றமாக நினைக்கும்.

நமது மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் பர்க்கன் ஹெட் பிடன் ஹாம் முதலிய பிரிட்டிஷ் தலைவர்கள் எதிர்ப்பையும்மேற்கொள்ளாமல் அவரின் ஆங்கிலேய சமூகங்களுக்குச் சமாதானம் சொல்லி இந்தியாவிற்கு டொமினியன் ஸ்டேட்டஸ் கொடுப்பதாய்ச் சொன்னாரே அது போல் சனாதன தருமக்காரர்களின் பகையையும் லட்சியம் செய்யாமல் சமயவாதிகளின் வயிற்றுப் பிழைப்பையும் கவனிக்காமல் சமயக் கொடுமைகள் துன்பத்தில் அவதிப்படுகிறவர்களின் தடையை எடுத்துவிட்டோம் என்று சொல்ல நமது சமூகத்தில் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களில் படித்தவர்களும் பணக்காரர்களுமாக எத்தனை பேர்கள் முன் வந்திருக்கிறார்கள். சட்டசபைக்கும் பெரியஉத்தியோகங்களுக்கும்,மேனாட்டுப் படிப்பிற்கும், காஸ்மாபால்டின் கிளப்பில் காபி குடித்துக் கண்டதெல்லாம் பேசுவதற்கு தானா உயர்ந்த ஜாதிக்காரர்களுக்கு பாத்தியம்; அதுமட்டும் இவர்கள் பிறப்புரிமையோ? புராதன சொத்தா? அதைக் கொடுக்காத கவர்ன்மெண்டு அநீதியுடையதாமே? அதுபோல அந்த நியாயத்தை நமது மற்ற சமூகத்தினிடமும் நாம் காட்ட வேண்டாமோ? தாழ்ந்த ஜாதியார் என்னப்பட்டவர்கள் பிறந்து வளர்ந்து பூர்வீகமாக இருந்து வரும் அவர்களுக்கு அவர்கள் நாட்டிலுள்ள பாத்தியங்கள் பிறப்புரிமையாகாதே? மேனாட்டிலுள்ள கலாசாலைப் படிப்பிற்கு முன் அரசு மரத்தடியில் ஒரு வேளை பிச்சை எடுத்து படித்து வந்த நமது உயர்ந்த ஜாதி இந்துக்கள் பிறப்புரிமை கொண்டாடுகையில் நமது நாட்டு பேர்டு, கோயில் முதலிய பள்ளிக்கூடத்திற்குப் பிறப்புரிமை கொண்டாட நமது நாட்டின் புராதனக்காரர்களுக்கு பாத்தியதையில்லையோ? சீமைச் சாராயம் பல மிருக மாம்ச சத்து எலும்பு குப்பு முதலிய அன்னிய தேசத்து மருந்துகளை வயிற்றில் நிறைத்து இரத்த மாம்சங்களை யெல்லாம் கொழுக்க வைத்துக் கொள்ள உயர்ந்த ஜாதி இந்துக்களுக்கும் திருப்பதி மருந்து விற்கும் பாத்தியதையைக் கொடுத்த நமது சமயம் நமது நாட்டிலுண்டான தண்ணீரை தாகத்திற்காக நமது நாட்டு பூர்வ குடிகள் எல்லாரையும் போல குடிப்பதற்கு இன்னும் பாத்தியதை நமது சமயம் கொடுக்கவில்லையே? இதற்கு நியாயம் சொல்ல தலைவர்கள் ஓரம் சொன்னார் மனைக்கு ஒப்பாகார்களோ? எளியவர்கள் தாழ்த்தப்பட்டிருப்பவர்கள் இவர்களுக்காக இரங்காதவர்கள் மரித்தவர்களென்றும், இரங்காதவர்களையும் அவர்கள் படித்த புஸ்தகங்களையும் அங்கிகளையும் சர்வ கலாசாலை சாட்சி பத்திரங்களையும் இன்னும்மற்றுமுள்ள அவர்கள்ஆடம்பரங்களையும் விழுங்கிவிடுவதற்கு போதுமான ஜலம் கடலில் இல்லையாடன்றே சுவாமி விவேகானந்தரும் வருத்தப்பட்டுச் சொன்னார்.

மேன்மை தங்கிய வைசிராய் விடுத்த ஸ்ரீமுகத்தை மூலை முடுக்கிலிருப்பவர்களெல்லாம் புகழ்ந்து பத்திரிகைக்கு எழுதினார்கள். பெரிய பத்திரிகைகள் தலையங்கமெழுதிற்று. சென்னையில் அவர் சொன்ன உபதேசத்தை புகழ்வதற்கு திரு. கண்ணப்பரும் திராவிடனும் இரக்கமுடைய சில வாரப் பத்திரிகைகளுமே இருந்தன. இதனாலேயோம் இன்னும் எதில்பக்குவமடையவேண்டுமோ? அவ்வரம்பை மதிக்கவில்லை என்று ஏற்படவில்லையா? இங்கிலாந்தில் நம்மைப்பற்றி குற்றம் சொல்லும் ஆங்கிலேயர்களை ஏன் கோபிக்கவேண்டும்?

உண்மையாகவே பூமியில் ஒரு பிரதேசத்தில் மாத்தானபிரிட்டிஷ்ஜாதியென்ற நியாயப்பெயர் பூண்ட ஜாதி ஒன்று வாசம் செய்கிறதென்பதை அறியும்படி எனது தேசத்தாரை வேண்டுகிறேன். இந்தப் பெரிய ஆங்கிலேயர் எல்லாவிதங்களிலும் உண்மையான மனிதர் என்று நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். தரும மகிமையாலே ஜாதி மகிமையுண்டாகிறது. ஆங்கிலேயர் தரும மகிமையாலே உயர்ந்த நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறார்கள் என்று மகாகவி ரவீந்திர நாத்தாகூர் சொன்னதைப்போல் ஆங்கிலேய ஜாதியில் இந்த காலத்தில் இப்பொழுது முதன்மையாக விளங்கும் ஆங்கிலேயர் நமது வைசிராய் இர்வின் பிரபுவேயாவார். அவர் நம்மிடமுள்ள மிருக சுபாவத்தை மட்டும் விட்டு விடச் சொல்லுகிறார். விட்டுவிட்டால் கடவுள் அருளும் தங்கும். ராஜபாக்கியமும் சித்திக்கும். இல்லையேல் நமது சமயத்தின் பலம் குறைந்து போய் நாம் அடிபட்டு உதைபட்டு பெண்ஜாதி பிள்ளை பொருள்களை தெருவில்விட்டு நம்மோடு நமது தெய்வங்களும் கஷ்டப்பட்டு எப்பொழுதும் ஐரோப்பா அரசாங்கத்திடம் முறையிட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

## ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சொப்பு விழுதல், காசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சீராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, தூக்கமடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகமுண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 ⎫ தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 ⎭

## பாரிச வாய்வு மருந்து.

வதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விசேஷ சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா)

(41)

# தமிழரசு

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் இனிது கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் துலக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பதிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள். பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வரைந்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

வருடச்சந்தா | உள்நாடு ரூ. 3-0-0
| வெளிநாடு ரூ. 4-0-0

'தமிழரசு' காரிய நிலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி,

சென்னை.

(65)

---

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.

(28)

---

வெளியாய் விட்டது! வெளியாய் விட்டது!!

தேன் ஒழுகும் சிறந்த நாவல் கூட்டங்கள்.

# நாவிரு நவீனக்களஞ்சியம்

(முதல்பாகம்)

1. விருப்பமுற்ற காதலர் (அல்லது மகளிர் மாண்பு) 2 ரோஜா இருந்தியது. 3. தேவகானம், 4. ஆச்சரியமான சமயம், ஆகிய நான்கு நவரசம் ததும்பும் நவீனங்கள் அடங்கியது விலை அணா 10. தபால் செலவு 0-5-0.

## திருக்குறள்

மூலமும் பொழிப்புரையும் சுத்தப் பதிப்பு இரண்டாவதாக சுமார் 300 பக்கங்கள் அடங்கியது. எல்லாத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பெற்றது.

விலை அணா 0 8 0.

தபால் செலவு 0-6-0.

## ஸ்ரீ லேகவன்

நவீன துப்பறியும் தமிழ்நாவல். வாசிக்கக் கையிலெடுத்தால் முடிக்காமல் கீழே வைக்க முடியாது.

விலை ரூபா 1 4 0.

தபால் செலவு 0-6-0.

இம்மூன்று புத்தகத்திற்கும் சேர்த்து முன்பணம் 2-6-0 மணியார்டர் செய்வோருக்கு தபால் செலவு இல்லை. ஒரு ரூபாய்க்குக் குறைவான [illegible] வி. பி. செய்ய முடியாது. ஒரு ரூபாய்க்குக் குறைந்த புத்தகம் வேண்டுவோர் புத்தக கிரயத்தோடு 2 அணா சேர்த்து தபால் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

தமிழ் நூற் பதிப்புக்கழகம், காஞ்சீபுரம்.

---

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கண்டசுவாசம் மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த க்ஷணத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9-0-0.

6 டின் விலை. ரூ. 5-4-0. 3 டின் விலை ரூ. 3-0-0.

F. M. S. முதலியவர்களுக்கு முன் பணம் ரூ. 2-8-0.

இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

ப்ரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

---

வியாபாரத்திற்கு அழகு:

விளம்பரம் செய்தல்

ஈரோடு, ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.